செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

ஆறுமுக நாவலர்





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-7-1

அண்ணா நூற்றாண்டு நூலகம்

ANNA CENTENARY LIBRARY

DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

ஆறுமுக நாவலர் *(1822 – 1879)*



அறிமுகம்

ஆறுமுக நாவலர் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் பிறந்தார். நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும், சேனாதிராச முதலியாரிடம் உயர்கல்வியும் பயின்றார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார். தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணி புரிந்தவர்.

தமிழ் பணி

- ஆறுமுக நாவலர் ஏட்டுச்சுவடிகளைக் கண்டறிந்து நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் பாடுபட்டார். தமிழ் நூல்களை முதன்முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித்தார்.

- தமிழ் உரைநடை செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார்.
- திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூற்காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.
- ஆறுமுக நாவலர் வித்தியாலனுபாலன ராஜேந்திரசாலை எனும் பெயரில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவி பாலர்பாடம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உரை, சிவாலய தரிசன விதி, சைவசமய சாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தி உரை, திருசெந்தினிரோட்டக யமகவந்தாதி உரை, திருமுருகாற்றுப்படை உரை போன்ற பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டு உள்ளார்.
- ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

மொழிபெயர்ப்பு

- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபராயிருந்த ‘பேர்சிவல்’ எனும் பாதிரியாருடன் இணைந்து கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

விருதுகள்

- நல்லூரில் நாவலர் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.
- இலங்கை அரசு 1971 அக்டோபர் 29-இல் நினைவு அஞ்சல்தலை ஒன்றை வெளியிட்டது.

சென்னை, தாம்பரத்தை அடுத்த மண்ணிவாக்கம் ஸ்ரீ நடேசன் வித்யாசாலா மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் ஆறுமுக நாவலர் நினைவைப் போற்றும் வண்ணம் "யாழ்ப்பாணம் நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலர் கலையரங்கம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(😊)(😊) @@@@@@ (😊)(😊)



ஆறுமுகநாவலர் தபால்தலை

நூல்கள்

நூலகம் இணைய நூலகம் அமைப்பில் ஆறுமுகநாவலர் பதிப்பித்த நூல்கள் உள்ளன

இயற்றி பதிப்பித்த சைவ சமய நூல்கள்

- சைவ சமய சாரம்
- சிவாலய தரிசன விதி
- நித்திய கருமவிதி
- சிரார்த்த விதி
- தர்ப்பண விதி
- குருசிஷ்யக்கிரமம்
- மருட்பா (போலியருட்பா மறுப்பு)

இயற்றி பதிப்பித்த கிறித்தவமத கண்டன நூல்கள்

- சிவதூடணப் பரிகாரம்
- மித்தியாவாத நிரசனம்
- சுப்பிர போதம்
- வச்சிரதண்டம்

இயற்றி பதிப்பித்த வசன நூல்கள்

- பெரியபுராண வசனம்
- திருவிளையாடற்புராண வசனம்
- கந்தபுராண வசனம்
- பெரியபுராண சூசனம்
- யாழ்ப்பாணச் சமயநிலை

இயற்றி பதிப்பித்த பாட நூல்கள்

- பாலபாடம் 1
- பாலபாடம் 2
- பாலபாடம் 3
- பாலபாடம் 4
- இலக்கண வினா விடை
- சைவ வினா விடை

பதிப்பித்த நூல்கள்

மூலப்பதிப்புகள்

- வில்லிபுத்தூரார் பாரதம்
- சேது புராணம்
- கந்த புராணம்
- பெரிய புராணம்
- திருவாசகம்
- திருக்கோவையார்
- திருச்செந்தூரகவல்
- நால்வர் நான்மணிமாலை
- மறைசையந்தாதி
- சிதம்பர மும்மணிக்கோவை
- குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
- உவமான சங்கிரகம்
- இரத்தினச் சுருக்கம்

மூலமும் உரையும் கொண்ட பதிப்புகள்

- நன்னூல் விருத்தியுரை
- நன்னூல் காண்டிகையுரை
- தொல்காப்பியச் சூத்திரவிருத்தி
- சிதம்பரமான்மியம்
- சிவஞானபோதமும் வார்த்திகமென்னும் பொழிப்புரையும்
- இலக்கணக் கொத்துரை
- தொல்காப்பியம் சொல்லதிகாரம்
- சேனாவரையம்
- சிவஞானபோத சிற்றுரை
- சிவராத்திரி புராணம்
- சிவசேத்திராலய மஹாத்ஸவ உண்மைவிளக்கம்
- சிவாலய தரிசனவிதி
- சுப்பிரமணிய போதகம்
- இலக்கண விளக்கச் சூறாவளி
- திருக்குறள் பரிமேலழகருரை
- கொலை மறுத்தல்
- தருக்க சங்கிரகவுரை

- அன்னபட்டீயம்
- பிரயோக விவேகம்
- திருச்சிற்றம்பலக் கோவையுரை
- திருக்கோவையார் நச்சினார்க்கினியருரை
- சூடாமணி நிகண்டுரை

புத்துரைப் பதிப்புகள்

- ஆத்திசூடி
- கொன்றைவேந்தன்
- நன்னெறி
- நல்வழி
- வாக்குண்டாம்
- கோயிற்புராணம்
- திருமுருகாற்றுப்படை
- சைவ சமய நெறி
- சிவதருமோத்தரம்
- திருச்செந்தினீரோட்டக யமகவந்தாதி
- மருதூரந்தாதி
- சௌந்தரியலகரி

பகுப்பு:ஆறுமுக நாவலர்


"ஆறுமுக நாவலர்" பகுப்பிலுள்ள பக்கங்கள்

https://noolaham.org/wiki/index.php/%E0%AE%AA%E0%AE%95%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81:%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95_%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D

சைவப்பணி

இலங்கையில் அமெரிக்க மிஷன் அமைப்பு வட்டுக்கோட்டை குருமடம், தெல்லிப்பளை கல்லூரி முதலியவற்றை நிறுவி தீவிரமாக மதப்பரப்பு செய்துகொண்டிருந்தது. ஆங்கிலக்கல்வியின் பொருட்டு யாழ்ப்பாண உயர்குடியினர் கிறிஸ்தவர்களாக மாறிக்கொண்டிருந்தனர். இது சைவத்தை அழிக்கும் என்று கருதிய ஆறுமுக நாவலர் சைவ மதப் பரப்பாளராக

ஆனார். கிறிஸ்தவர்கள் சைவ மதத்தை கண்டித்து எழுதிய துண்டுப்பிரசுரங்களுக்கு மறுப்பாக கண்டன வெளியீடு களை வெளியிட்டபடி அவருடைய சைவப் பணியை தொடங்கினார். சிறுநூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டார். சைவத் தோத்திர நூல்களுக்கு உரை எழுதினார்.



உவமான சங்கிரகம்

சிறு நூல்களை எழுதினார். பழமையையும், மரபையும் மீட்டெடுக்கும் முயற்சியில் தொடர்ந்து செயல்பட்டார். சிதம்பரத்தில் நவம்பர் 11, 1864-ல் 'சைவப் பிரகாச வித்யாசாலை' என்ற சைவ பாடசாலையைத் தொடங்கினார். போர்ச்சுகீசியரால் அழிக்கப்பட்ட, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் எனும் பழைமையான சிவபெருமான் திருக்கோயிலை மீண்டும் உருவாக்க முயற்சி செய்தார். சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

சைவம் சார்ந்த பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவச் சொற்பொழிவு செய்து தமது புலமையை வெளிப்படுத்தி திருவாவடுதுறை ஆதீனகர்த்தரிடமிருந்து நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலம் தங்கி சூடாமணி நிகண்டுரையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலன அச்சியந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல்

விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

மீண்டும் சென்னைக்கு திரும்பி திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார். சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல சைவ நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறை மற்றும் திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கி சைவச் சொற்பொழிவுகள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.



பூலோகசிங்கம், நாவலர் வரலாறு

1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுர சமஸ்தானத்தில் சொற்பொழிவாற்றினார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்தில் பேசினார். குன்றக்குடி ஆதீனத்திலும் திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய ஊர்களிலும் சொற்பொழிவாற்றினார். சிதம்பரத்திற்குச் சென்று 1864 ஐப்பசியில்

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். 1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார்.

1870-ல் ஆறுமுக நாவலர் கோப்பாயில் ஒரு சைவக் கல்விநிலையை ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார். 1871-ல் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் என்பவர் நடத்திய வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பிள்ளைகளின் நன்மை கருதிய நாவலர், சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணார்பண்ணையில் 1872 தை மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப்பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது.

1872 ஐப்பசி மாதத்தில் தாம் அதுவரை பெற்ற அனுபவத்தால் அறிந்த உண்மைகளைத் திரட்டி எழுதி அதற்கு யாழ்ப்பாணச் சமய நிலை எனப் பெயர் தந்து வெளிப்படுத்தினார். 1875க்கும் 1878க்கும் இடைப்பட்ட காலத்தில் நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடல் புராணம், நன்னூற் காண்டிகையுரை, சிவபூசா விதி, மூன்றாம் அனுட்டான விதி, குரு சிஷ்யக் கிரமம், பூசைக்கு இடம்பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ்-சமக்கிருத அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி முதலிய நூல்களை எழுதுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் நாவலர் ஈடுபட்டார்.

இலக்கியப்பணிகள்

சொற்பொழிவாளர்

ஆறுமுக நாவலரின் முதன்மை ஊடகமாக மேடையுரையே இருந்தது. வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசம்பர் 31, 1847-ல் முதல் சொற்பொழிவு ஆற்றினார். அதுவே அவரை சைவ அறிஞராக வெளிக்காட்டியது. வாழ்நாள் முழுக்க சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்த அவருடைய இறுதிச் சொற்பொழிவு 1879-ல் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

குருபூசை நாளான ஆடிச்சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்றது.

உரையாளர்


ஆறுமுக நாவலர்
சரித்திரம்.
இது
1882.

ஆறுமுகநாவலர் இரு தளங்களில் நூல்களை எழுதியிருக்கிறார். தமிழிலக்கணம் சார்ந்தும் சைவநெறிகள் சார்ந்தும் அவர் நூல்கள் அமைந்தன. அவர் 24 நூல்கள் எழுதியுள்ளார். 16 நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவர் உரை எழுதிய நூல்களுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலான சிறுவர் இலக்கியமும் அடங்கும்.

'தமிழ் உரை நடையின் தந்தை', 'தமிழ் வசன நடையின் தந்தை' என அழைக்கப்படுகிறார். மேலைநாட்டவர் பயன்படுத்திவந்த முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி ஆகியவற்றை தமிழுக்கு அறிமுகப்படுத்தினார்.

பதிப்பாளர்

ஏட்டுச்சுவடிகளை கண்டறிந்து பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். பாலபாடம், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் உரை, சிவாலய தரிசன விதி, சைவ சமய சாரம், நன்னூல் விருத்தியுரை உள்ளிட்ட பல நூல்களை அச்சிட்டார். இலக்கணம், சமயநூல்கள், காப்பியங்கள் எனப் பலவகையாக 44 நூல்களை பதிப்பித்தார்.

ஆறுமுக நாவலரின் சைவ அணுகுமுறை

ஆறுமுக நாவலர் சைவம் சார்ந்து உறுதியான மரபுவழிப் பார்வை கொண்டிருந்தார். சைவ ஆகமமுறைகள் அனைத்து ஆலயங்களிலும் விதிவிலக்கில்லாமல் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என வாதிட்டார். சிதம்பரம் ஆலயம் சைவ வழிபாட்டுக்குள் உள்ள தனித்தன்மைகொண்ட போக்குகளையோ சைவத்திற்குள் கிளைத்த ராமலிங்க வள்ளலாரின் இயக்கம் போன்ற புதிய போக்குகளையோ அவர் சற்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் சைவ மடங்களுடன் நெருக்கமான தொடர்பில் இருந்தார். மரபை நிலைநாட்டுவதில் மடங்கள் தலைமைதாங்கவேண்டும் என எண்ணினார்.

ஆறுமுக நாவலர் சைவம் என்பது தென்னாடு சார்ந்தது என்று நம்பினார். ஆகவே ஆகமங்களுக்கு அடுத்தபடியாக சைவத் திருமுறைகளையே சைவமூலநூல்களாக முன்வைத்தார். தேவார பாராயணத்தை எல்லா ஆலயங்களிலும் நடைமுறைப்படுத்த முயன்றார்.

மரபான சைவ ஆசாரங்களை வலியுறுத்தினார். சைவர்கள் சிவதீக்கை எடுத்துக்கொள்வது உட்பட எல்லா வாழ்க்கைப்பழக்கங்களையும் கடைப்பிடிக்கவேண்டும் என வலியுறுத்தினார். சைவர்கள் குலத்தில் குறைந்தோருடன் சேர்ந்திருந்து உண்பதை, தாழ்த்தப்பட்டோரைத் தொடுவதை விலக்கினார்.

அடிப்படையில் ஆறுமுகநாவலரை ஒரு மரபுமீட்புவாதி, பழமைநோக்கு கொண்டவர் என்று வரையறை செய்யலாம்.


சைவப் பாடசாலை நிறுவல்

1870-இல் நாவலர் கோப்பாயில் ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார். 1871-இல் வண்ணார்பண்ணையில் *ஜோன் கில்னர்* என்பவர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்பிள்ளைகளின் நன்மை கருதிய நாவலர், சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணர்பண்ணையில் 1872 தை

மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப்பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது.

1872 ஐப்பசி மாதத்தில் தாம் அதுவரை பெற்ற அனுபவத்தால் அறிந்த உண்மைகளைத் திரட்டி எழுதி அதற்கு *யாழ்ப்பாணச் சமய நிலை* எனப் பெயர் தந்து வெளிப்படுத்தினார். 1875-இக்கும் 1878-இக்கும் இடைப்பட்ட காலத்தில் நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடல் புராணம், நன்னூற் காண்டிகையுரை, சிவபூசா விதி, மூன்றாம் அனுட்டான விதி, குரு சிஷ்யக் கிரமம், பூசைக்கு இடம்பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ்-சமக்கிருத அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி முதலிய நூல்களை எழுதுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் நாவலர் ஈடுபட்டார்.

ஆறுமுக நாவலர்



பிறப்பு	ஆறுமுகன் 18 திசம்பர் 1822 நல்லூர் (யாழ்ப்பாணம்), பிரித்தானிய இலங்கை
இறப்பு	திசம்பர் 5, 1879 (அகவை 56) நல்லூர் (யாழ்ப்பாணம்), பிரித்தானிய இலங்கை
தேசியம்	இலங்கைத் தமிழர்

பணி	பதிப்பாளர், சைவபிரசங்கர், கல்விசாலை நிறுவனர், எழுத்தாளர்
அறியப்படுவது	சைவசமயசமுக மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்
சமயம்	சைவம்
வாழ்க்கைத் துணை	பிரம்மச்சரிய விரதம் பூண்டவர்

நினைவகங்கள், வாழ்க்கை வரலாறுகள்

- ஆறுமுக நாவலரின் நினைவாக இலங்கை அரசு அக்டோபர் 29, 1971-ல் நினைவு அஞ்சல்தலை வெளியிட்டது.
- நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில் நாவலர் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம் -வே. கனகரத்தின உபாத்தியாயர்
- ஆறுமுகநாவலர் சரித்திரம். த கைலாசபிள்ளை
- யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரச் சுருக்கம். சி.செல்லையா பிள்ளை



ஆறுமுகநாவலர் சிலை

ஆறுமுக நாவலரின் உரைத்திறன்

நீதி வெண்பா உரையில்,

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்கும்
துன்று கிளைக்கும் துயர்சேரும்-குன்றிடத்தில்

பின்இரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம் (-74)

என்ற பாடற்கதையை நாவலர் பின்வருமாறு விளக்குகின்றார்;-

“எவராலும் ஏற முடியாத ஒரு பெரிய மலைக்குகையில் ஓர் அரச அன்னம் அன்னப் பட்சிகளோடு வாசம் செய்து கொண்டிருக்கும் போது, ஒருநாள் இரவு பெருமழையினால் வருந்திய ஒரு காக்கை, தான்இருக்க இடம்கேட்டது. மந்திரியாகிய அன்னம் காக்கைக்கு இடம் கொடுக்கலாகாது என்று சொல்லவும், அரச அன்னம் அதன் சொல்லைக் கேளாமல் காக்கைக்கு இடம் கொடுத்தது. காக்கை அன்று இரவில் அங்கே தங்கி எச்சமிட அவ் எச்சத்தில் இருந்து ஆலம் வித்து முளைத்து எழுந்து பெரிய விருக்ஷமாகி, விழுதுகளை விட்டது. ஒரு வேடன் விழுதுகளைப் பற்றிக் கொண்டு அம்மலையில் ஏறிக் கண்ணிவைத்து அன்னங்களைப் பிடித்தான்”.

மொழித்திறன் குறித்த நிகழ்ச்சி

ஆறுமுக நாவலர் ஆங்கிலப் புலமையும் வாய்ந்தவர்.வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க வேண்டியிருந்தபோது நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் ஆறுமுக நாவலர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். ஆறுமுக நாவலர் ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் முணுமுணுத்தபடி தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட, ஆறுமுக நாவலர் உடனே, ’எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்று காலோட்டப்புக்குழி’ என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப்போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட நாவலர் மறுத்து தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மொழிபெயர்த்தார். ’சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது’ என்பது அவர் கூறியதற்கு அர்த்தம். (எல்லி, ஆழிவரம்பு, கால் ஏற்று, காலோட்டம், புக்குழி எனும் வார்த்தைகளுக்கு முறையே சூரியன், கடற்கரை ஓரம், காற்று வாங்க, சிறுநடை, புறப்பட்டபோது என்று பொருள்)

‘தற்கால உரைநடையின் தந்தை’


ஆறுமுக நாவலர்!

பி.தயாளன்

HTTPS://KEETRU.COM/INDEX.PHP/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/32319-2017-01-26-03-46-26

இலங்கை யாழ்ப்பாணம் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர்களிடமிருந்து டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். 18 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் வசமானது.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேய கிருஸ்துவ பாதிரிமார்கள் தங்கள் மதத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டனர். பள்ளிகள் அமைத்து ஆங்கில மொழியைப் பயிற்று மொழியாக்கினர். ஆங்கிலத்தில் வல்லமை பெற்றவர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு அளித்தனர். பண உதவியும், சலுகைகளும் ஆங்கில மொழி படித்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. சைவ சமயத்தை இகழ்ந்து பிரச்சாரம் செய்தனர். கிருஸ்துவ மதம் பரவிட சைவ சமயம் தடையாயிருப்தை அறிந்து அதை அடியோடு ஒழித்திட முனைந்தனர்.



இந்த சமூகச் சூழலில், "தாம் வாழ்ந்த சமுதாயத்தை நோக்கி, அச்சமுதாயத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுபவை எவை என அறிந்து, அவற்றைச் செயற்படுத்த தமது வாழ்க்கையைத் தியாகம் செய்தமையே, ஆறுமுக நாவலரது தனித்துவத்திற்கும், சிறப்புக்கும் அடிப்படைக் காரணமாகும்."

மேலும், "தற்போது வரலாற்று ஆராய்ச்சியும் விஞ்ஞான அடிப்படையில் வளர்ந்திருக்கிறது. ஆயினும் இலங்கையின் வரலாற்றில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களில் முக்கிய ஒருவராக நலலைநகர் நாவலர் விளங்குகின்றார்."

"நாவலர் மரபுக் கூறுகளில் ஒரு முகப்படுத்தப்பட்ட இலக்கிய நோக்கு மக்கட்சார்பு, நாட்டு நலநாட்டம் என்பன சிறப்பானவை என்பதையும் அவை மறைமுகமாகவேனும், உள்ளார்ந்த சக்தியுடனும் செயற்படுத்துவதினாலேயே தற்கால ஈழத்துத் தமிழலக்கியம் சிற்சில அம்சங்களில் தமிழக இலக்கியப் போக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது என்பதையும் நாம் ஐயத்துக்கிடமின்றி உணரக்

கூடியதாயிருக்கிறது." என பேராசிரியர் க. கைலாசபதி தமது ஆய்வில் பதிவு செய்துள்ளார்.

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரில் 18.12.1822 அன்று கந்தர் - சிவகாமி வாழ்விணையருக்கு மகனாப் பிறந்தார்.

ஐந்து வயதில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்தில் கல்வி கற்றார். வாக்குண்டாம், நிகண்டு எண் சுவடிகளைக் கற்றார். பின்னர் நைடதம், பாரதம், கந்தபுராணம் போன்ற நூற்களையும் மனப்பாடம் செய்தார். வேலாயுத முதலியாரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை கற்றார். சேனாதிராய முதலியார், சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் நன்னூல், திருக்கோவையார், சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற நூற்களைக் கற்றார். தமது பன்னிரெண்டாவது வயதில் பெர்சிவல் பாதிரியார் நடத்திய யாழ் வெஸ்லியன் மிசன் பள்ளியில் ஆங்கிலம் பயின்றார். சைவசித்தாந்த சாத்திரங்களையும் சிவகாமத்தையும் கற்பதற்குத் துணைபுரியும் வடமொழியையும் நன்கு கற்றார்.

இவருடைய தமிழ், ஆங்கில மொழித் திறமையைக் கண்டு தமது பள்ளியில் கீழ்வகுப்புகளுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகளுக்கு தமிழும் கற்பிக்க வேண்டிக் கொண்டார் பெர்சிவல் பாதிரியார். ஊதியம் எதுவும் பெறாமலே அப்பணியைச் செய்தார் ஆறுமுக நாவலர். 1841 ஆம் ஆண்டு முதல் வெஸ்லியன் கல்லூரியில் பணியாற்றினார். பெர்;சிவல் பாதிரியாரின் வேண்டுகோளின்படி விவிலியத்தை தமிழில் மொழி பெயர்த்து அளித்தார். தனது கல்வி, சமயத் தொண்டுகளுக்கு இடையூறாக இருக்கும் என்றெண்ணி தமது ஆசிரியப் பணியை 1842 ஆம் ஆண்டு துறந்தார்.

சைவ சமயத்தைப் பரப்பிட கிருஸ்துவ பாதிரிமார்களைப் போலவே பொது வீதிகளிலும், பொது இடங்களிலும் சொற்பொழிவு செய்ய வேண்டிய தேவையை உணர்ந்தார். 1847 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் தேதி வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் முதல் முதலாக கிருஸ்துவ மதப்பிரச்சாரத்தைக் கண்டித்து சைவச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

சைவ சமய மாணவர்கள் கல்வி பயில 1848 ஆம் ஆண்டு வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆறுமுக நாவலர்

நிறுவினார். நாவலரது அயரா உழைப்பாலும், இடைவிடா முயற்சியாலும் யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, இனுவில், கோப்பாயி, புலோலி முதலான இடங்களிலும் சைவ வித்தியாசாலைகள் உருவாக்கப்பட்டன.

ஆறுமுக நாவலர் சைவ சமய சொற்பொழிவாற்றுவதிலும், தாம் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்பிப்பதிலும் முழுமூச்சுடன் ஈடுபட்டார்.

தமது சைவப்பிரகாச வித்தியாசாலையில் சைவ சமயக் கல்வி, தமிழ் இலக்கியங்களாகிய கந்தபுராணம், பெரியபுராணம் மற்றும் இலக்கணங்களாகிய நன்னூல், வீரசோழியம் போன்றவற்றையும் கற்பித்தார். மேலும், கணிதம், வரலாறு, புவியியல், வானியல், தர்க்கம், சோதிடம் வேளாண்மை, வைத்தியம், அரசநீதி ஆங்கிலம், சிற்பம் போன்ற பாடங்களும் முறையாகக் கற்பிக்கப்பட்டன.

எந்த மாணவனுக்கும் கல்வியூட்டுவதற்கு அவனுடைய தாய்மொழியே மிகச் சிறந்தது என்பதே கல்வி நிபுணர்களதும், உளநூல் வல்லுநர்களதும் முடிவு ஆகும். நாவலர் நடத்திய வித்தியாசாலையிலும் தாய் மொழியான தமிழில் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிழையற்ற கருவி நூல்களையும், சமய நூல்களையும் தேவையெனக் கருதி தாமே எழுதினார். தமது பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிட வீடுதோறும் படி அரிசி திரட்டும் திட்டத்தை செயற்படுத்தினார். யாழ்ப்பாணத்திலுள்ள வெஸ்லியன் மிஷன் ஆங்கிலப்பள்ளியில் ஆங்கிலம் கற்ற சைவ சமய மாணவர்கள் நெற்றியில் விபூதி பூசிக் கொண்டு நுழைவதைப் பள்ளியில் கிருஸ்துவ பாதிரியார் தடுத்தார். இதனால் பள்ளி மாணவர்கள் ஆறுமுக நாவலரிடம் வந்து நெற்றியில் விபூதி பூசியதால் பள்ளியிலிருந்து துரத்தப்பட்டோம். நெற்றியில் பூசியுள்ள விபூதியை அழித்துவிட்டுச் சென்றால் பள்ளியில் அனுமதிக்கப்படுவோம் என்று முறையிட்டனர். மேலும், தாங்கள் எங்களுக்காக ஆங்கிலப் பள்ளி ஒன்றை நிறுவினால் நாங்கள் ஆங்கிலமும் கற்போம், புறச்சமய போதனையிலிருந்தும் விடுபடுவோம் என்று வேண்டிக் கொண்டனர். அதையடுத்து 1848 ஆம்

ஆண்டு பிப்ரவரி மாதம் ‘வண்ணார்ப்பண்ணை சைவ ஆங்கில வித்தியாசாலை’ எனப் பெயர் கொண்ட பள்ளி ஒன்றை நிறுவினார். ஆங்கிலேய அரசின் உதவி இல்லாததால் நான்காண்டுகள் மட்டும் இப்பள்ளியை நடத்தினார்.

ஆறுமுக நாவலர், தமது பாடசாலை மாணவர்களுக்கு பாடநூல்களையும், சைவ சமய நூல்களையும் அச்சிட்டு வெளியிட அச்சு இயந்திரம் வாங்கிட முடிவு செய்தார். அச்சு இயந்திரம் வாங்கிட சதாசிவம் பிள்ளையுடன் சென்னைக்குச் சென்று வந்து அச்சு இயந்திரங்களை வாங்கினார். அந்த அச்சு இயந்திரங்களைக் கொண்டு, யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 1849 ஆம் ஆண்டு ‘வித்தியாநுபாலன யந்திர சாலை’ என்னும் அச்சகத்தை நிறுவினார். அந்த அச்சுக் கூடத்திலிருந்து பாலபாடங்கள், ஆத்திச்சூடி, கொன்ற வேந்தன், கொலை மறுத்தல், நன்னூல் சங்கிர நமச்சிவாயர் உரை, திருமுருகாற்றுப்படை உரை முதலியவற்றை வெளியிட்டார்.

சென்னையிலிருந்து திருவாவடுதுறை ஆதினத்திற்கு 1849 ஆம் ஆண்டு சென்றார். இவரது கல்வித் திறனையும், ஆராய்ச்சித்திறனையும், சொற்பொழிவாற்றும் திறனையும் கண்டு வியந்து, அவ்வாதீனத்தின் பண்டார சந்நிதியாக விளங்கிய தவத்திரு அம்பலவாண தேசிகர் ‘நாவலர்’ என்னும் பட்டத்தை வழங்கினார். அன்று முதல் ஆறுமுகம்பிள்ளை நல்லூர் ஆறுமுக நாவலர் ஆனார்.

சென்னையில் ‘வித்தியாநுபாலன யந்திர சாலை’ என்ற பெயரில் பெரிய அச்சுக் கூடத்தை நிறுவினார். சென்னையிலிருந்த போது சூடாமணி, சௌந்தர்யலகிரி முதலிய நூல்களை அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். மேலும், பெரியபுராணத்தை வசனநடையில் எழுதி மிகச் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டார்.

இராமநாதபுரம் மன்னர் பொன்னுச்சாமி தேவர் நாவலரை விரும்பி அழைத்துத் தமது சபையிலே சொற்பொழிவாற்றச் செய்வித்து, அதனைக் கேட்டு மகிழ்ந்து இவருக்குப் பல விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார். மேலும், இராமநாதபுரம் மன்னர் பொன்னுச்சாமித் தேவர் வேண்டுகோளின்படி, சென்னையில் தங்கியிருந்த ஆறுமுக நாவலர்,

திருவாசகம், திருக்கோவையார், திருக்குறள் பரிமேலழகர் உரை, தருக்கசங்கிரகம் முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார்.

ஆறுமுக நாவலர் சிதம்பரத்தில் 1864 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதி சைவ வித்தியாசாலையைக் கட்டத் தொடங்கினார். இங்கு ஆறு ஆண்டுகள் தங்கியிருந்து தமிழையும், சைவத்தையும் கற்பித்தார். அங்கு ஆறு வகுப்புகள் நடைபெற்றது. ஒவ்வொரு வகுப்பிலும் திருக்குறள், சூடாமணி, பெரியபுராணம் முதலிய இலக்கியங்களும், சைவ சமய நூல்களும் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டன.

திருவருட்பிரகாச வள்ளலார் பாடிய ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை, பல தொகுதிகளாக வகுத்து ‘திருவருட்பா’ என்று பெயர் சூட்டி வெளியிட்டனர்.

சமயக் குறவர்களோடு இராமலிங்க அடிகளாரை உயர்த்தி பேசக் கூடாது, அவர் பாடிய பாடல்களுக்கு ‘அருட்பா’ என்று பெயர் கொடுக்கக் கூடாது என்பதை ஆறுமுக நாவலர் முன்வைத்தார். மேலும் அருட்பாவுக்கு மருட்பா எழுதி வெளியிட்டார் ஆறுமுக நாவலர்.

இராமலிங்க அடிகளார் சிதம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆறுமுக நாவலரின் நிலைபாட்டை மறுத்து உரை நிகழ்த்தினார். இது குறித்து ஆறுமுக நாவலரால் 1869 ஆம் ஆண்டு கடலூர் மஞ்சகுப்பம் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில் நீதி மன்றம் இராமலிங்க அடிகளாருக்கு எவ்விதத் தண்டனையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் மேல்நிலைப் பள்ளி என்ற பெயரில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாவலர் கல்வி மரபானது சைவ சமயக் கல்வி, தமிழ் மொழிக் கல்வி, தொழிற்கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த நோக்குடன் விளங்கியது.

சைவ சமயத்தைப் பரப்பிட யாழ்ப்பாணத்திலிருந்து ‘சைவோதய பானு’ என்னும் பெயரில் இதழ் ஒன்றைத் தொடங்கினார். இராமசாமி,

சைவசமயாபிமாணி, சைவப் பிரகாசர், நடுவன், கருணை, சைவன், சைவப் பிரகாச சமாஜியர் ஆகிய புனை பெயர்களில் பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் ஆறுமுக நாவலர் எழுதி உள்ளார்.

இலங்கை மட்டுமல்லாமல் தமிழ் நாட்டிலும் சைவ சமயப் பிரச்சாரத்தை முழு அளவில் மேற்கொண்டவர் ஆறுமுக நாவலர். திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், மதுரை ஆதீனம் ஆகிய மடங்களில் சைவ சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

ஆறுமுக நாவலரது சைவ சமயப் பிரச்சாரம் வெளிநாட்டவரைக் கூட வியப்பில் ஆழ்த்தியது. ராபின்சன் பாதிரியார் 1867 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் வெளியிட்ட 'இந்து பாஸ்டேர்ஸ்' என்னும் நூலில், "பாதிரிமாராகிய நாங்கள் முயன்றது போலவே நாவலரும் முயன்று சைவ சமயப் பிரசங்கங்கள் செய்து, அச்சுக் கூட்டம் அமைத்து நாங்கள் வெளியிட்டது போல் புத்தகங்கள் அச்சிட்டு வெளியிட்டார்" என்று பதிவு செய்துள்ளார்.

தமிழ் நூல்கள் ஏட்டுச் சுவடி அளவில் இருந்து, பாதுகாப்பற்றுக் கறையானுக்கும் செல்லுக்கும் மண்ணுக்கும் இரையாகிப் போவதைத் தடுத்த நிறுத்த முற்பட்டவர் ஆறுமுக நாவலர். ஓலைச் சுவடியிலிருந்து பெயர்த்தெடுத்து, பல பிரதிகளோடும், ஏட்டுச் சுவடிகளோடும் ஒப்பிட்டுப் பரிசோதித்து, அவற்றுள் எது இலக்கணம், பொருள் ஆகியவற்றுக்கு ஒத்து வருகிறது என ஆராய்ந்து அப்பாடத்தைப் பதிப்பித்தார். இவர் பாடவேறுபாடுகளை அச்சிடுவதில்லை. அதே போன்று பிரதிகளின் மூலமின்றி எந்த ஒன்றையும் தாமாகத் திருத்தியதில்லை. இலக்கணம், சித்தாந்தம் தொடர்புடைய நூல்களில் தமக்கு முன்பிருந்த ஆசிரியர்களின் துணையின்றித் தாமாக எதையும் சொல்லியதே இல்லை. நாவலருடைய பதிப்பு நூல்களில் பிழை இருக்காது.

அவர் பதிப்பித்த நூல்களில் பக்க எண் பாடல் எண், தலைப்பு எண் ஆசிய அனைத்தும் தமிழ் எண்ணாகவே இருக்கும். பதிப்பித்த ஆண்டு கூடத் தமிழ் ஆண்டு, தமிழ் மாதம் குறிப்பிடப்பட்டு இருக்கும். ஆங்கில ஆண்டு இடம் பெறாது.

இலக்கணக் கொத்து மூலமும் உரையும், உபநிடதம் மூலமும் உரையும், கந்தபுராணம், கந்தரலங்காரம், சிங்கைச் சிலேடை வெண்பா, சிவதத்துவ விவேகம், சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், திருக்குறள் மூலமும் உரையும், திருக்கோவையார், திருவாசகம், தேவாரத்திரட்டு, நன்னூல் காண்டிகையுரை, மகாபாரதம், நன்னெறி மூலமும் உரையும், வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய மகாபாரதம் உட்பட 46 நூற்களைப் பதிப்பித்துள்ளார். இலக்கணச் சுருக்கம், இலக்கிய வினாவிடை, துருவாக்கியம், சிதம்பர மான்மியம், சிவாலய தரிசன விதி, சிவபூசைத் திரட்டு, சைவ சமயம், சூசனம், சைவ வினாவிடை, பாலபாடம், யாழ்ப்பாணத்துச் சமயநிலை, வள்ளியம்மை திருமணப் படலம் உட்பட 24 நூற்கள் எழுதியுள்ளார்.

மேலும், ஆத்திச்சூடியும் கொன்றை வேந்தனும், நல்வழி, கோயிற்புராணம், சைவ சமய நெறி, திருத்தொண்டர் புராணம், திருமுருகாற்றுப்படை, பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் உட்பட 17 நூற்களுக்கு உரை எழுதி அளித்துள்ளார்.

கவிதை உலகில் இருந்த தமிழன்னையை வசன உலகிற்குச் கொண்டு வந்ததில் ஆறுமுக நாவலருக்கு மிகப்பெரிய பங்குண்டு.

“நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும், குறைந்த கல்வியுடைய பிறரும் எக்காலத்துக்கும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும், கல்வியில்லாத ஆடவர்களும், பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும், வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி அச்சிறப்பதிப்பித்தேன்” என்று தமது உரைநடை குறித்து ஆறுமுக நாவலர் பதிவு செய்து உள்ளார்.

இலக்கண இலக்கியப் பிழைகளும், அச்சுப்பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும், சைவ சமய நூல்களையும் ஆறுமுக நாவலர் பதிப்பித்து தமிழுலகிற்கு அளித்துள்ளார்.

“பாட்டுக்களால் இயன்ற நூல்களே மட்டுமின்றி உரை நூல்களும் இலக்கியமே என்னும் கருத்தைப் பலர் ஏற்றுக் கொள்ளாத ‘இருண்ட’

காலப்பகுதியில் உரைநடை நூல்கள் இயற்றி உய்யும் நெறி காட்டியவர் நாவலர். 'ஆறுமுக நாவலரை, வசனநடை கைவந்த வல்லாளர்' என பரிமாற்கலைஞர் போற்றியுள்ளார். மேலும், 'தற்கால உரைநடையின் தந்தை' என இலங்கைப் பேராசிரியர் வி. செல்வநாயகம் புகழ்நதுரைத்துள்ளார்.

ஆறுமுக நாவலரை 'புதிய தமிழ் உரைநடையின் தந்தை' என்று தமிழறிஞர் மு. வரதராசனார் போற்றியுள்ளார்.

வீரமாமுனிவருக்குப் பின் தமிழ் உரைநடையை புதிய பாதையில் செல்ல வைத்தவராக விளங்கினார் ஆறுமுக நாவலர், அவரது உரைநடை எளிமையும், தெளிவும் கொண்டது.

"உரை எழுதும் பணி எளிதானதன்று, ஒரு நூலுக்கு உரை எழுதும் பொழுது அந்நூலைப் பன்முறை கற்றிருக்க வேண்டும். நிகண்டுகளையும் பிழையறப் பயின்றிருக்க வேண்டும். மூல நூலில் எக்கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு மட்டுமே உரை எழுத வேண்டும். மூல நூலாசிரியரின் கருத்துக்கு மாறுபட்ட கருத்துகளைத் தாமே வலியப் புகுத்தி உரை எழுதக் கூடாது. அனைத்திற்கும் மேலாக, எழுதப்படும் உரையானது அனைவருக்கும் மிக எளிதில் விளங்கும் முறையில் அமைய வேண்டும். இத்தனை முறைகளையும் கையாண்டு எழுதும் உரையே மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும்" என உரையாசிரியருக்கான இலக்கணம் வகுக்கப்பட்டு உள்ளது. இந்த இலக்கணத்தின் அடிப்படையில் ஆறுமுக நாவலர் சிறந்த உரையாசிரியராக விளங்கினார். மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த 'உரைநடை வித்தகர்' என்று பெருமை பெற்று விளங்கியவர் ஆறுமுக நாவலர்.

வில்லியம் கிரகேரி என்னும் இலங்கையின் ஆஸ்பதி 1877 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை புரிந்தார். குடநாட்டில் கொடிய பஞ்சம் நிலவியதால், பஞ்ச நிவாரணத்திலும், பொது நிர்வாகத்திலும் பல ஊழல்கள் நடைபெற்றன. அதைக் குறிப்பிட்டு 1878 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகைபுரிந்த ஜேம்ஸ்வோங்கிடன் என்ற ஆங்கிலேய அதிகாரியிடம் ஆறுமுக நாவலர் நீண்டதோர் விண்ணப்பம் கொடுத்தார்.

அந்த விண்ணப்பத்தில் வயல்வரி, தலைவரியுடன் மதிப்பீட்டு வரிப்பணம் செலுத்த வேண்டிய கொடுமை. களவு, சண்டைகள் நிகழும்போது, காவல் நிலையங்கள் வெகுதொலைவில் இருப்பதால் உரிய நேரத்தில் சென்று புகார் கூற இயலாத நிலைமை, காவல் படையினரது குடிப்பழக்கம், கண்ணியமானவரைக் கூட முரட்டுத்தனமாக நடத்தும் கொடுமை, அலுவலகங்களில் சிப்பாய்கள் அதிகாரிகளைப் பார்க்க விடாமல் பெரியவர்களைத் துரத்தி விடும் கொடுமை, காவல்துறையினருக்கு எதிராக அனுப்பப்படும் குறைகளை அலட்சியம் செய்தல் முதலியவற்றை புகார்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆறுமுக நாவலர் தமது வாழ்நாளின் இறுதிநாட்களில் சமூக சேவையாலும் ஈடுபட்டார். 1877 ஆம் ஆண்டு மழை குறைந்தமையினால் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் நெல் விளைச்சல் மிகவும் குறைந்து பஞ்சம் ஏற்பட்டது. ஆறுமுக நாவலர் சிலரின் உதவி பெற்று ஏழைகளுக்கு கஞ்சி காய்ச்சி ஊற்றினார். மேலும் கஞ்சித் தொட்டிக் கூட்டம் நடத்தி அரிசி, காய்கறிகளை சேகரித்து ஏழைகளுக்கு உணவு அளித்திட ஏற்பாடு செய்தார்.

ஆறுமுக நாவலர் சமூகத்துறையில் தமது கவனத்தைச் செலுத்திய பொழுது, மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய பிரச்சனைகளில் முன்னின்று உழைத்தார். உணவு, சுகாதாரம், உழைப்பு, கல்வி, ஆட்சிமுறை முதலியன அனைவரையும் பாதிக்கக் கூடியவை. இத்துறைகளிலே ஆங்கிலேயர் ஆட்சியில் காணப்பட்ட அநீதிகளையும், அபத்தங்களையும் ஆன்ம வீரர்களுக்குரிய இலட்சியப் பிடியுடனும், கண்டிப்புடனும் வெளிப்படுத்தினார்.

ஆறுமுக நாவலர் 1874 ஆம் ஆண்டு வெளியிட்ட ‘இலங்கைப் பூமி சரித்திரம்’ என்ற நூலில், “வறுமைக்கும் துன்பத்துக்கும் சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுபானம். இலங்கையிலே பூர்வகாலத்தில் மதுபானம் மிக அரிதரிது. தற்காலத்திலோ அது விருத்தியாகிக் கொண்டே வருகிறது. மதுபானம் மூலம் துரைத்தனத்தாருக்கு ஆண்டுக்கு பல லட்ச ரூபாய் வரவு வருகிறது. ஆங்கிலேய துரைத்தனத்தார், தமக்குச் சாராயத்தால் எய்தும் பொருளைப் பிறவாயில்கள் சிலவற்றால் எய்துவிக்கத் தலைப்பட்டுக் கொண்டு சாராயத்தை ஒழிப்பாராயின், இலங்கைச் சனங்கள்

செல்வமும் ஆரோக்கியமும் அடைவார்கள்" என்று அன்றே மதுவை எதிர்த்து குரல் கொடுத்துள்ளார்.

சர். முத்துக்குமாரசுவாமி இலங்கைச் சட்டசபை உறுப்பினராக இருந்து போது 04.05.1879 திடீரென்று இறந்துவிட்டார். அப்போது, பொன். இராமநாதனை சட்டசபைக்கு உறுப்பினராக முன் மொழிந்த நாவலர் "சட்டசபையில் நமது பிரதிநிதியாக அமர்பவர் தமிழராயிருத்தல் வேண்டும். அவர் சிறந்த கல்வி பெற்றவராகவும், உயர்ந்த கொள்கையுடையவராகவும் இருத்தல் வேண்டும். கருத்துச் சுதந்திரமும், எந்தச் சூழலிலும் அக்கருத்தை வெளியிடும் திறமையும் வேண்டும். மேலும் ஆள்வோரதும், ஆளப்படுவோரதும் மதிப்பிற்குரியவராக இருத்தல் வேண்டும்" என அறிவித்தார். ஆறுமுக நாவலரின் வேண்டுகோளின்படி இலங்கைச் சட்டசபை உறுப்பினராக பொன். இராமநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த அளவுக்கு தமிழர்கள் மத்தியில் ஆறுமுக நாவலர் செல்வாக்கு பெற்று விளங்கினார்.

'புத்தகம்' என்ற தலைப்பில் நாவலர் எழுதிய கட்டுரையில், "கல்வியை விரும்பிக் கற்கும் மாணாக்கர்களும், கல்வியிலே தேர்ச்சியடைந்த வித்துவான்களும், இனிக்கற்க முயல்பவர்களுமாகிய எல்லாருக்கும் புத்தகங்கள் இன்றியமையாதனவாம். புத்தகங்களின்றிக் கற்கப் புகுவோர் கோலின்றி நடக்கக் கருதிய குருடர் போல்வர். யாதாயினும் ஒரு தொழிலைச் செய்பவனுக்கு அதனைச் செய்வதற்குரிய ஆயுதம் இன்றியமையாதது போல, கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு அதனைக் கற்றற்குரிய புத்தகம் இன்றியமையாததேயாம். ஆதலால், வித்தையை விரும்பிக் கற்கும் சிறுவர்கள் புத்தகங்களைச் சம்பாதித்து, அவைகளைக் கிழியாமலும், அழுக்குப்படியாமலும், கெட்டுப் போகாமலும் பாதுகாத்து வைத்துப் படித்தல் வேண்டும்" என அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், கல்வியில் விருப்பமுடையவர்களாகிய வறிய பிள்ளைகளுக்குப் புத்தகம் வாங்கிக் கொடுத்தல் பெரும் புண்ணியம் என வலியுறுத்தினார்.

நமது தேசத்து அரசர்களும், மடாதிபதிகளும், பிரபுக்களும் கருவி நூல்களையும், ஞான நூல்களையும் சம்பாதித்து வைத்து, ஊர்கள் தோறும்

புத்தகசாலைகளைத் தருமத்தின் பொருட்டு ஸ்தாபித்து, கல்வியில் விருப்பமுடைய எவரும் எளிதில் வாசித்து ஈடேறும்படி அவைகளை நடத்தி வருதல் உயர்வொப்பில்லாத பெரும் புண்ணியம்"என சுமார் 138 ஆண்டுகளுக்கு முன்பே ஊர்தோறும் நூல்நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளார் ஆறுமுக நாவலர்!

"மொழிபெயர்ப்புக் கலையில் ஈழத்தவர் தலைசிறந்தவர் என்பதையும், யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்பதையும், விவிலிய தமிழ் மொழி பெயர்ப்பு வழி நிலைநாட்டி ஈழத்திற்குப் பெரும்புகழ் சேர்க்கப் பணிபுரிந்து இளமையிலே தன் திறமையை நிறுவியவர் ஆறுமுக நாவலர் என்பதில் ஐயமில்லை" என பேராதானைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வை. கனகரத்னம் புகழ்ந்துரைத்துள்ளார்.

ஆறுமுக நாவலர், தமிழ் மொழியில் முதன் முதலாகப் பிரசங்கம் செய்தவர். தமிழில் கட்டுரை இலக்கியம் முதலில் இவரால் நல்ல முறையில் எழுதப்பட்டது. தமிழில் எழுந்த பாடநூல்களுக்கு இவரே வழிகாட்டியாவார். உரைநடையிற் ஆங்கிலக் குறியீட்டு முறையை முதன் முதலிற் புகுத்தியவர். சைவ – ஆங்கில பாடசாலையை முதல் முதன் நிறுவியவர்.

ஆறுமுக நாவலரை செந்தமிழைப் பேணி வளர்ந்த பெரும்புலவன்" என கவிமணி போற்றியுள்ளார்.

தமிழகத்தின் சமய வரலாறு, இலக்கிய வரலாறு, சமூக வரலாறுகளில் ஆறுமுக நாவலர் தமது முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளார். ஆறுமுக நாவலரை 'தேசிய இலக்கிய பிதா' என பேராசிரியர் கா. சிவத்தம்பி புகழ்நதுரைத்துள்ளார்.

சைவப் பிரசாரகராக, பதிப்பாசிரியராக, மொழி பெயர்ப்பாளராக, நூலாசிரியராக உரையாசிரியராக, பாடநூலாசிரியராக விளங்கிய ஆறுமுக நாவலர் தமது ஐம்பத்து ஏழாவது வயதில் 18.11.1879 அன்று மறைந்தார். யாழ்பாணத்தில் நாவலர் கலாச்சார மண்டபம், சைவ நூல் நிலையம் அவரது நினைவைப் போற்றும் வகையில் செயல்பட்டு வருகிறது.

இலங்கை அரசு 29.10.1971 அன்று ஆறுமுக நாவலருக்கு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

- பி.தயாளன்





யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் கலாச்சார மண்டபம், நாவலர் வீதியில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு அருகில் அமைந்துள்ள ஒரு முக்கிய பண்பாட்டு மையமாகும். இந்த மண்டபம் கலை, இலக்கியம் மற்றும் இந்து சமய நிகழ்வுகளை நடத்துவதற்கான இடமாக செயல்படுகிறது, மேலும் இது யாழ்ப்பாணம் கலாச்சார மையத்துடன் (திருவள்ளுவர் கலாச்சார மையம்) தொடர்புடைய செயல்பாடுகளையும் கொண்டிருக்கலாம்.

யாழ்ப்பாண நாவலர் கலாச்சார மண்டபம் தொடர்பான முக்கிய தகவல்கள்:

- ***அமைவிடம்:*** யாழ்ப்பாண மாநகர சபை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- ***பயன்பாடு:*** கலாச்சார நிகழ்வுகள், கண்காட்சிகள், மற்றும் இலக்கிய நிகழ்வுகள் நடைபெறும் இடம்.
- ***நிர்வாகம்:*** யாழ்ப்பாண மாநகர சபையின் கீழ் இயங்குகிறது.

தொடர்புடைய முக்கிய கலாச்சார மையங்கள்:

- ***யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாச்சார மையம்:*** இது இந்திய உதவியுடன் கட்டப்பட்ட ஒரு பெரிய நவீன கலைக்கூடம். இது யாழ்ப்பாண நூலகத்திற்கு அருகில் உள்ளது.
- ***நாவலர் கலாச்சார மண்டபம்:*** இது யாழ்ப்பாண கலாச்சார மையத்திலிருந்து வேறுபட்ட, தனித்துவமான மற்றொரு இடமாகும்.

குறிப்பு: நாவலர் கலாச்சார மண்டபம் குறித்த சமீபத்திய நிகழ்வுகள் அல்லது நிகழ்ச்சி நிரல்களுக்கு, யாழ்ப்பாண மாநகர சபையின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளைப் பார்ப்பது சிறந்தது.

நவலார் கலாச்சார மண்டபம்

https://ta.srilanka-places.com/places/navalar-cultural-hall-jaffna

நவலார் கலாச்சார மண்டபம் இருக்கிறது ஒரு கலாச்சார மையம் அமைந்துள்ளது யாழ்ப்பாணம். It is one of the 194 கலாச்சார மையங்கள் இல் இலங்கை. முகவரி நவலார் கலாச்சார மண்டபம் இருக்கிறது நவலார் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை. நவலார் கலாச்சார மண்டபம் அதைச் சுற்றி பல பட்டியலிடப்பட்ட இடங்கள் உள்ளன, நாங்கள் குறைந்தபட்சம் உள்ளடக்கியுள்ளோம் 65 அதைச் சுற்றியுள்ள இடங்கள் ஸ்ரீலங்கா-இடங்கள்.காம். நவலார் கலாச்சார மண்டபம் மதிப்பிடப்படுகிறது 4 (5 நட்சத்திரங்களில்) மூலம் 8 இணையத்தில் விமர்சகர்கள்.

Beaches & Islands

சுற்றியுள்ள சில இடங்கள் நவலார் கலாச்சார மண்டபம் அவை -

S.K.S கட்டுமானம் (கட்டுமான அலுவலகம் மற்றும் வன்பொருள்) (வன்பொருள் கடை) ராசவிந்தோதம் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 222 meters)

S.K.S கட்டுமானம் (கட்டுமான அலுவலகம் மற்றும் வன்பொருள்)
வன்பொருள் கடை இல் யாழ்ப்பாணம்

call**94770760071**

3 மதிப்புரைகளின் அடிப்படையில் 5 மதிப்பீடு
மேலும் அறியவும்
IOM யாழ்ப்பாணம் (அரசு சாரா அமைப்பு) 160 கோவில் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 435 meters)
லிங்கன் டீ மற்றும் பேக்கரி (கஃபே) 555 நவலார் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 272 meters)

[அழகு ராணி](#) (பியூட்டி பார்லர்) 562 நவலார் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 350 meters)

[ஆதில் பியூட்டி பார்லர்](#) (பியூட்டி பார்லர்) பாயிண்ட் பருத்தித்துறை ஆர்.டி., நல்லூர், இலங்கை (தோராயமாக. 399 meters)

[தியாஹி ஹால்](#) (விழா மண்டபம்) யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 178 meters)

[யர்ல் மார்ட்](#) (கடைகளுக்காக பல்பொருள் மரச்சாமான்கள் ஸ்டோர்) எண் 320 நவலார் ஆர்.டி, யாழ்ப்பாணம் 40000, இலங்கை (தோராயமாக. 125 meters)

[திரு சீல்](#) 134 ராசவிந்தோதம் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 227 meters)

[டி.சி.டி.](#) (பல்பொருள் அங்காடி) நவலார் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 153 meters)

[நவலார் கலாச்சார மண்டபம்](#) (கலாச்சார மையம்) நவலார் ஆர்.டி, யாழ்ப்பாணம், இலங்கை (தோராயமாக. 100 meters)



ஆறுமுக நாவலர் (1822–1879) யாழ்ப்பாணத்தில் பிறந்த ஈழத்துச் சைவத் தமிழ் அறிஞர், கல்வியாளர் மற்றும் பதிப்பாசிரியர். "நவீன தமிழ் உரைநடையின் தந்தை" எனப் போற்றப்படும் இவர், சைவ சமயத்தையும் தமிழையும் நிலைநிறுத்தப் பாடுபட்டவர். பல பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்ததுடன், பள்ளிப் பாடநூல்களை உருவாக்கி, உரைநடை மூலம் சமயக் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

[ஆறுமுக நாவலர் வரலாறு](#) **(சுருக்கமாக):**

- **பிறப்பு:** 1822 டிசம்பர் 18 அன்று இலங்கையின் யாழ்ப்பாணம் நல்லூரில் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.
- **கல்வி:** தமிழ், சமஸ்கிருதம் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமை பெற்றார். கிறிஸ்தவ மிஷனரிப் பள்ளியில் ஆங்கிலம் பயின்றாலும், சைவ சமயப் பற்றுடன் திகழ்ந்தார்.
- **பணி:**

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் சைவ சமயப் பிரசங்கங்களை (சொற்பொழிவு) நடத்தினார்.

- ***சமயப் பணி:*** *சைவ சமயத்தைப் பரப்பவும், கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுக்கவும் "சைவப் பிரகாச வித்தியாசாலை" என்னும் பள்ளியை நிறுவினார்.*
- ***தமிழ் சேவை:*** *பழந்தமிழ் நூல்களை (பெரியபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை போன்றவை) பிழையின்றி பதிப்பித்தார். சிறுவர்களுக்காகப் 'பாலபாடம்' உள்ளிட்ட பல பாடநூல்களை எழுதினார்.*
- ***நாவலர் பட்டம்:*** *இவருடைய சிறப்பான சொற்பொழிவுத் திறமையைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு **"நாவலர்"** பட்டம் வழங்கியது.*
- ***மறைவு:*** 1879 *ஆம் ஆண்டு டிசம்பர்* 5-*ஆம் நாள் இயற்கை எய்தினார்.*

சிறப்புகள்:

- *தமிழ் உரைநடைக்கு வடிவம் கொடுத்தவர்.*
- *தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதில் 'பதிப்பு நெறிமுறை'யைக் கையாண்டவர்.*
- *'தேசிய இலக்கிய பிதா' எனப் போற்றப்படுகிறார்*

பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடை

https://www.tamilvu.org/courses/degree/p203/p2034/html/p2034662.htm

17, 18ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளிலிருந்து சமயம் பரப்ப வந்த துறவியர் தமிழ் கற்றனர்; உரைநடை நூல்களைப் படைத்தனர். பேச்சு மொழியிலும், ஆங்கிலக் கலப்பிலும் அந்த உரைநடைகள் அமைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் கிறித்துவ சமய உரைநடை நூல்களே அதிகம் வெளியாயின. முகம்மதியர் நூல்கள் பெரும்பாலும் மொழிபெயர்ப்பாகவே அமைந்தன. ஆங்கில அரசு 1835இல் அச்சகம் வைத்துக் கொள்ளும் அனுமதியை இந்தியர்களுக்குத் தந்தது. உரைநடை உற்சாகம்

பெற்றுப் புதிய பாதை கண்டது. ஆனாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை கூடப் பனையோலைகளும், அச்சு நூல்களும் ஒரே சமயத்தில் நிலவி வந்தன. தமிழறிஞர்கள் பலர் உரைநடையின் பக்கம் கவனத்தைத் திருப்பினர். அவர்களில் சிலரின் உரைநடைப் போக்கினைக் காண்போம்.

ஆறுமுக நாவலர்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் தமிழ் உரைநடை வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர். உரைநடையின் தந்தை என்றும் பாராட்டப்படுபவர். நாவலர் காலம் கிறித்துவ சமயப் பிரச்சாரம் எழுச்சி பெற்றிருந்த காலம். அதனால் சைவரான நாவலர் தம் சமயமான சைவத்தைப் பரப்பப் பொதுமக்களுக்கும் புரியும் எளிய நடையில் உரைநடை படைத்தார்.

பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், பாலபாடம், நன்னூற் காண்டிகை உரை, சைவசமய நெறியுரை எனப் பல நூல்களை அவர் படைத்தார்.

இலக்கணப் பிழை இல்லாமல், சிறு சிறு வாக்கியங்களில் எழுதுதல்; மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி எழுதுதல் என்பது நாவலருக்குக் கைவந்த கலை.

"சிறு சிறு வாக்கியங்களின் திட்பம், அவை கோவையாகப் பத்தி பத்தியாக ஒற்றுமை நயம்பட்டு விளங்கும் நுட்பம், கட்டுரை முழுவதும் ஒரு பொருளாய் அமையும் இனிமை, கருத்தின் தெளிவு, சொற்களின் எளிமை, அழகு இலக்கண நயம் - இவை எல்லாம் இவரது உரைநடையில் காணலாம் ' எனத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தம்முடைய நீங்களும் சுவையுங்கள் என்ற நூலில் பாராட்டுவார்.

நாவலரின் எளிய நடைக்குச் சான்றாகக் கீழ்க்காணும் பகுதி அமைகின்றது.

"சில நாள் கழிந்த பின், சோழராசன், வரகுண பாண்டியனோடு போர் செய்யக் கருதித் தன் சேனையோடு வந்து, மதுரையை அணுகினான். வரகுண பாண்டியன், அஃதறிந்து, தன் சேனையோடு எதிர்ந்து பொருதான்."

இராமலிங்க சுவாமிகள்

இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மருதூரில் பிறந்தவர். சிறுவயதில் சென்னையில் வசித்தார். வடலூருக்கு அருகே மேட்டுக் குப்பத்தில் வாழ்ந்து, சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பினார். மனுமுறை கண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம், உண்மை நெறி முதலிய உரைநடை நூல்களை எழுதினார். இராமலிங்க சுவாமிகள் கையாண்ட உரைநடை, இலக்கண வரம்புடையது. மேலும் கற்றோர் விரும்பக் கூடிய

சொற்களிலேயே எழுதப்பட்டிருந்தது. அவருடைய வாக்கியங்கள் பல பக்கங்களுக்கு நீண்டு செல்லும் தன்மையுடையது. ஆகவே "பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது அல்ல" என்பார் வி.செல்வநாயகம்.

வீராசாமி செட்டியார்

வீராசாமி செட்டியார் இயற்றிய விநோத ரசமஞ்சரி சிறந்த உரைநடை இலக்கியமாகக் கருதப்படுகின்றது. வாக்கியங்களை நீண்டதாக எழுதியிருந்தாலும், அவை படிப்போருக்கு அலுப்புத் தோன்றாத வகையில் அமைந்துள்ளன. உலக வழக்கில் உள்ள சொற்களையும், மக்களிடையே சாதாரணமாக வழங்கும் பழமொழிகளையும், உவமைகளையும் தம் உரைநடையில் வீராசாமி செட்டியார் பயன்படுத்தியுள்ளார். இவருடைய நடையைக் கதம்ப நடை என்றும் கூறுவர். தெலுங்கு, வடமொழிச் சொற்கள் இவருடைய உரைநடையில் கலந்துள்ளன.

"அக்காலத்தரசர்களிற் சிலர் நிறை கல்வி கற்காமலும், அரசியற்று முறைமை இன்னதென்று குறியாமலும் சற்சன சகவாச செய்யாமலும், 'துரியோதனன் குடிக்குச் சகுனியைப் போல' க் கிருத்திரம குணமுள்ளவர்களையும், 'குதிரை பிடிக்கச் சம்மட்டி அடிக்கக் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்ன' த் தக்கவர்களையும்...' என்னும் பகுதி வீராசாமி செட்டியார் உரைநடைத் தன்மைக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது."

பிறர் உரைநடை

19ஆம் நூற்றாண்டில் எழுந்த உரைநடை நூல்களுள் வித்துவான் தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்து இயற்றிய பஞ்ச தந்திரம் குறிப்பிடத்தக்கது. அந்நூல் மாணவர்கள் படித்தறியும்படித் தெளிவாக எழுதப்பட்டது.

யாழ்ப்பாணம் அ.சதாசிவம் பிள்ளை பாவலர் சரித்திர தீபகம், வானசாஸ்திரம், சாதாரண இதிகாசம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். அவர் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குச் சொற்களைத் தமது உரைநடையில் கலந்து எழுதினார்.

ஆறுமுக நாவலர் வரலாறு

https://yarl.com/forum3/topic/102113-%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%B0%E0%AE%B2%E0%AE%BE%E0%AE%B1%E0%AF%81/

நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார். அவர் யாழ்ப்பாணம், நல்லூர் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆகிய இருவருக்கும் புதல்வனாக 1822ம் ஆண்டு அவதரித்தார். இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த போது சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப் பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் ஆறுமுகம்.வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக்களின் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர்விட்டிலங்குவதுமான சைவ சமயம் அந்நியரது செல்வாக்கு வலிவுற்றிருந்த காலத்தில் சிறிது நலிவுற்றிருந்தது. இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வந்த அந்நிய ஆட்சியாளர் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றவும் தற்சமயம் கொள்கையை பரப்பவும் எண்ணங்கொண்டு கல்வி வழிப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர். அந்நியவெற்று நாகரீகப் போக்கில் ஈடுபாடு கொண்ட மக்கள் சுயமசய கலாசார வழிகளை மறந்து வாழ்வாராயினர்.

இவ்வாறு சைவ சமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையை யும், சைவத் தமிழ் பணிகளையும் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. சைவம் காத்த நாவலர் பெருமானை சைவமக்கள் ஐந்தாம் சமயக்குரவர் எனப் போற்றுகின்றனர்.

தமது இளமைப் பருவத்திலே நல்லூர் சுப்பிரமணிய உபாத்தி யாயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத் துப் புலவர் ஆகியோரிடம் குருகுல முறைப்படி இலக்கிய, இலக்கணங்களையும், சைவசமயம், சாத்திரங்களையும், பயின்று வட மொழியையும் பயின்றார். யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷன் மத்திய கல்லூரியில் ஆங்கில மொழியைக் கற்றதுடன் அக்கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

சவ சமயத்தை அழிய விடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவப் பாடசாலைகளை நிறுவினார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை

வண்ணார்ப்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையாகும். அது 1848ம் ஆண்டில் நிறுவப் பெற்றது. தமிழ் நாடு சிதம்பரத்திலும் சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் பாடசாலையொன்றை நிறுவி அங்கு போதிப்பதற்கு சைவசமய நூல்களைப் பிரசுரித்தார். இதற்காக சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடங்களை நிறுவினார்.

சைவ வினாவிடை, பாலபாடம், பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலான பல நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சில் பதிப்பித்தவரும், அத்துறையில் ஏனையோருக்கு வழி காட்டியாக விளங்கியவரும் நாவலர் பெருமானே ஆவார். சைவத் தமிழ்ப் பணிகளை இடையூறின்றி செய்வதற்காக தமக்குக் கிடைத்த உத்தியோகத்தையும் தியாகம் செய்தவர் நாவலர் பெருமான். தமது வாழ்நாள் முழுவதும் பிரம்சாரியாகவே வாழ்ந்தவர். சிவாலயங்களிலும், மடாலயங்களிலும் சைவ சமய உண்மைகளை எடுத்துக் கூறி பிரசங்கம் செய்தல், புராணப் படலம் செய்தல் என்பவற்றினால் சைவப் பிரசாரம் செய்தவர் நாவலர் அத்துடன் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு சைவத்தின் உண்மையை விளக்கி சைவ மக்களிடையே புகுந்துள்ள மாசு நீக்கிப் புறச் சமயத்தவரின் தீவிர பிரசாரத்தை தடுக்க முற்பட்டவர்.

திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார். இதன் காரணமாக ஆலயங்கள் மீண்டும் அமையப் பெற்றன. இறைவனின் இயல்புகளும், இறை நெறியின் அறப்பண்புகளும் கற்பிக்கப்படுகின்றன. எமது கலைத்திட்டத்திலே சமயக் கல்விக்கு இன்று முக்கியத்துவம் தரப்படுகின்றது. இதனை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உணர்ந்து எங்கள் நாவலர் பெருமான் நடைமுறைப்படுத்தினார். இலவசக் கல்வி, இலவச நூல்கள், தாய்மொழிக் கல்வி என்று நாடு பெருமைப்படும் கல்விச் சாதனைகளை அன்றே அவர் நிலைநாட்டினார்.

கல்வியழகும், தெய்வ நெறியும், பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத்துடித்தார். அதற்காக கடுமையாக அவர் உழைத்தார். அவரது வாழ்வின் இலட்சியமே இதுவாக இருந்தது. வசதியான உத்தியோகத்தைப் பெறும் வாய்ப்பிலிருந்தும் அவர் அதனை ஏற்கவில்லை. இல்வாழ்வில்

புகவில்லை. இவையனைத்துக்கும் காரணம் சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற பேராசை தம்மிடம் குடிகொண்டிருந்தமை யாகும் என ஒரு சந்தர்ப்பத்திலே தம் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார் நாவலர்.

நெற்றியிலே நீறுபூசவும், வாழையிலையிலே அமுதுண்ணவும் கூட நம்மவர்கள் அஞ்சியஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த அவலங்கள் மாறவும், அன்று அந்நியரின் இன்னல் தாங்காது நாட்டை விட்டே வெளியேறிய ஞானப்பிரகாசர் போன்றோரின் பிரார்த்தனைகள் பலிக்கவும் நாவலர் எழுந்தார். எங்கள் கலாசாரம் பிழைத்துக் கொண்டது. சிவநெறி தழைத்து முன்பிருந்த எங்கள் சமயாச்சாரியார்கள் தாம் தரிசனம் செய்யப் போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன் இடங்களிலெல்லாம் லோகோபகாரமாகச் சைவப் பிரசங்கங்களைச் செய்து வந்தார். சமயப் பிரசங்கங்களுடன் சமயா சாரியார்களின் தேவார திருமுறைகளையும் விளங்கச் செய்தவர் நாவலர். அந்த நன்நெறிப் பயணத்திலே தான் எத்துணை இடர்கள், ஆதரவில்லாத அந்நியர்கள் இழைத்த இன்னல்கள்.

ஒரு புறம் அடியவர் போன்று வேஷமிட்டு ஏமாற்றும் நம்மவர் செய்கை, மறு புறம் அனைத்தை யும் தம் உறுதியான தெளிந்த உள்ளத்தினால் வென்றார். நாவலர் “நிலையில்லாத என் சரீரம் உள்ளபோதே என்கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ எனும் கவலை என்னை இரவு பகலாக வருத்துகின்றது என்று கூறிய நாவலர் பெருமானின் கருத்தின்படி தமிழ்க் கல்வியும், சைவ சமயமும், அபிவிருத்தியா வதற்கு கருவிகள் மற்றும் முக்கிய ஸ்தலங்கள் தோறும் வித்தியா சாலை தாபித்தலும் சைவப் பிரசாரம் செய்வித்தலு மாகும். இவற்றின் பொருட்டு சிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும், சைவப் பிரசாரகர்களுமே தேவைப்படுவார்கள் என்ற நாவலரின் ஏக்கம் தீர இளைய நாவலர்கள் பலர் எழுந்தார்கள், பெருமானின் பணிகளிலே இவர்களும் கலந்தார்கள்.

1894ம் ஆண்டிலே நல்லூர் கந்தசாமி கோயிலிலே நிகழ்ந்த ஒரு அற்புதக் காட்சியை நாவலர் சரித்திரத்திலே பின்வருமாறு வர்ணிக்கின்றார் கனகரத்தினம் பிள்ளை, கந்தசாமி கோயிற் திருவிழா சமீபித்தபடியால் தேவாரத் திருக் கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலியவை திருவிழா காலத்திலே சுவாமிக்குப் பின்னாக ஓதுவதற் சனங்களுக்குண்டாகும் கடவுட் பக்தியையும் மக்களுக்கு எடுத்துக்காட்ட நினைத்து திருவாவடுதுறையினின்று ஓதவார் சிலரை அழைப்பித்து திருவிழா காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைய சைவர்களுக்கும் நெற்கு

வீதி மடத்திலே புண்ணியவான்கள் சிலரைக் கொண்டு மகேஷ்வர பூஜை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவங் கொண்டருளும் போது சுவாமிக்குப் பின்னாக அவர்களைக் கொண்டு தேவாரம் ஓதுவித்துக் கொண்டு வந்தார். இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத அதனைக் கண்ட பிராமணர் தாங்களும் வந்து சுவாமிக்குப் பின்னாக வேதம் ஓதுவாராயினார்கள்.


நாவலரும் விபூதி உந்தூறனஞ் செய்து திரிபுண்டரந் தரித்து தலையிலேய சிரமாலையும் கழுத்திலே கண்டிகையுங் கையிலே பௌத்திர முந் தரித்து யாவர்க்கும் பக்தியை விளைவிக்கத்தக்க சிவ வேடப் பொலிவோடு திருக்கூட்டத் தலைவராய் நின்றார். அத்திருக்கூட்டத்தின் சிறப்பை என்னென்று சொல்வோம்! எதற்கொப்பிடுவோம், சுப்பிரமணிய பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பதினாராயிரம் திருக்கூடத்தோடு தோற்றிய சிறப்புக் கொப்பிடலாம்.

தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்துக்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறை பதம் அடைந்தார்.

தமிழுக்கும், சைவத்துக்கும் அரும் தொண்டாற்றிய நாவலர் பெருமானை அவரது குரு பூசை தினத்தில் நினைத்து வழிபட்டு அவர் பெருமை பேசுவோமாக.

ஆறுமுக நாவலர்

https://www.hindutamil.in/news/blogs/66764-10.html



சைவநெறி தழைக்கவும், தமிழ் மொழி செழிக்கவும் பாடுபட்ட ஆறுமுக நாவலர் (Arumuga Navalar) பிறந்த தினம் இன்று (டிசம்பர் 18). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

l இலங்கையின் யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள நல்லூரில் (1822) பிறந்தார். குடும்பத்தில் பலரும் தமிழ் அறிஞர்கள். ஆரம்பக் கல்வி வீட்டிலேயே தொடங்கியது. நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களைக் கற்றார். 9 வயதில் தந்தை இறந்தார்.

l சரவணமுத்து புலவர், சேனாதிராச முதலியாரிடம் குருகுல முறையில் உயர் கல்வி பயின்றார். தமிழ் இலக்கியம், இலக்கணம், சாஸ்திரங்கள், சிவாகமங்களைக் கற்றார். சிறு வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலத்தில் புலமை பெற்றார். தலைசிறந்த எழுத்தாளர். நல்ல பேச்சாற்றல் கொண்டவர்.

l யாழ்ப்பாணம் மெதடிஸ்த ஆங்கில பாடசாலையில் (மத்திய கல்லூரி) 20-வது வயதில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். அதன் நிறுவனர் பேர்சிவல் பாதிரியாருக்கு பைபிளைத் தமிழாக்கம் செய்வதில் உறுதுணையாக இருந்தார்.

l வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் 1847 முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சொற்பொழிவு ஆற்றினார். இதனால் பலரும் சிவதீட்சை பெற்றனர். அசைவ உணவைத் தவிர்த்தனர். இவரது முயற்சியால் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு, பூஜைகள் நடைபெறத் தொடங்கின.

l சமயக்குரவர்களின் பாடல்களை சுவடியில் இருந்து தொகுத்துப் புத்தகமாக அச்சிட்டார். தன் வீட்டுத் திண்ணையில் பல மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தார். சைவப் பிரகாச வித்யாசாலை என்ற பாடசாலையைத் தொடங்கினார்.

l சைவ சமய வளர்ச்சியில் கவனம் செலுத்துவதற்காக, ஆசிரியர் பணியை 1848-ல் துறந்தார். அச்சு இயந்திரம் வாங்க 1849-ல் சென்னை வந்தார்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப் பிரசங்கம் செய்து நாவலர் பட்டம் பெற்றார். சூடாமணி, நிகண்டுரை, சவுந்தர்ய லஹரியை பதிப்பித்தார்.

l தன் வீட்டிலேயே அச்சுக்கூடம் நிறுவி, பாலபாடம், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் உரை, சிவாலய தரிசன விதி, சைவ சமய சாரம், நன்னூல் விருத்தியுரை உள்ளிட்ட பல நூல்களை அச்சிட்டார். பெரிய புராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஏடுகளாக இருந்த பல நூல்களை அச்சிலேற்றினார். பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தவர்.

l ஒருமுறை சென்னை கடற்கரையில் இவர் நடந்து சென்றபோது, அருகே உள்ள குடிசையில் தீப்பிடித்துவிட்டது. இதுசம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கவேண்டி இருந்தது. ஆங்கிலத்தில் பேச முற்பட்ட இவரை நீதிபதி தடுத்து, தமிழிலேயே பேசுமாறும், அதை நீதிமன்ற அதிகாரிதான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கூறவேண்டும் என்றும் கூறினார்.

l உடனே நாவலர், ''அஞ்ஞான்று எல்லிஎழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்று காலோட்டப்புக்குழி'' என்றார். மொழிபெயர்ப்பாளர் திணறிவிட்டார். 'சரி சரி, ஆங்கிலத்திலேயே கூறுங்கள்' என்று நீதிபதி சொல்ல, மறுத்த நாவலர், 'சூரியன் உதிப்பதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்று தெரிவித்தாராம்.

l 20-க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். 8 நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். ஏழைகளுக்கு இலவச நூல்களோடு இலவசக் கல்வியும் வழங்கி தாய்மொழியில் கல்வி கற்கச் செய்த நாவலர் பெருமான் 57-வது வயதில் (1879) மறைந்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822-1879)

https://yarl.com/forum3/topic/257276-%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%B0%E0%AF%80%E0%AE%B2%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%B0%E0%AF%80-%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D-1822-1879/



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

இந்தியாவைப் போலவே, ஈழமும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமய-பண்பாட்டு நெருக்கடிகளை எதிர்கொண்டது. போர்த்துகீசிய, பிரெஞ்சு, டச்சு, ஆங்கில காலணி ஆதிக்கங்களும், கிறித்துவ மிஷனரிகளின் இந்து சமய எதிர்ப்புப் பிரசாரங்களும் இந்தியாவில் புதிய சமய-பண்பாட்டு இயக்கங்களைத் தோற்றுவித்தன. இவற்றுள் பிரம்ம சமாஜம் (1828) பிரார்த்தனை சமாஜம் (1857), ஆர்ய சமாஜம் (1875), இராமகிருஷ்ண மிஷன் (1886), பிரம்ம ஞானசபை எனப்படும் 'தியோகெமிகல் சொசைடி' (1875), சமரச சுத்த சன்மார்க்க சங்கம் (1865) ஆகியன குறிப்பிடத்தக்கன.

இதே காலகட்டத்தில் இலங்கை ஈழத்தில் போர்த்துகீசிய, டச்சு, ஆங்கிலேய காலனியாதிக்கங்களாலும், அவற்றின் ஆதரவில் முடுக்கி விடப்பட்ட சில கிறிஸ்துவ மிஷனரிகளின் இந்து, சைவ சமய எதிர்ப்பு பிரசாரங்களும் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரை சைவ சமய எழு ஞாயிறாகத் தோன்றச் செய்தன. ஈழத்தில் சைவ சமயமே மிகப் பழமையானது, பெரும்பான்மையானது. ஆங்கிலக் கல்வியும், அதன் வழி அரசு ஊழிய பெரும் வாய்ப்பும், சைவ சமய உண்மை நெறி அறியா அறியாமையும் மேலோங்கி இருந்த சூழலில் சைவ சமயம், 'பிழைக்குமோ' என்ற பேரச்சம் பரவிய காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூரில் ஆறுமுக நாவலர் 18/12/1822 இல், கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகவாகப் பிறந்தார்.

பதின்மூன்றாம் வயதிலேயே சைவ சமயத்தின் வீழ்ச்சியைத் தடுத்து

அருள்புரிய சிவபெருமானிடம் பிரார்த்தனை செய்து ஒரு வெண்பாவை இயற்றியதாக அவருடைய வரலாற்றை 1916-இல் எழுதிய யாழ்ப்பாணம் நல்லூர் த. கைலாசபிள்ளை குறிப்பிட்டுள்ளார். அந்த வயதில் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் வெஸ்லியன் மத்திய பாடசாலையில் ஆங்கிலம் கற்று வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமது இளமைக்காலத்துச் சிந்தனைகளை, 1868இல் வெளியிட்ட "சைவ சமயங்களுக்கு விக்கியாபனம்" எனும் கட்டுரையில் கூறியதாவது:

"நான் ஜய வருஷம் (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஷ் கற்றேன். பிலவ வருஷம் (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனானேன். பார்சிவல் துரை 'நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது' என்று பல தரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இல்வாழ்க்கையில், புகவில்லை. இவையெல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையாம். நான் என் சிறுவயது முதலாகச் சிந்தித்து சிந்தித்து, சைவ சமயத்தை வளர்த்ததற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவ சமய விருத்தியின் கண்ணாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சக்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சக்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே!" என்று இரவும் பகலும் பெருங் கவலை கொண்டு பெருமூச்செறிதலிலும் பலருக்கும் பிதற்றலிலுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்குவேனாயினேன்."

இங்கு பண்டைய ஈழத்தின் அரசியல் பின்னணியையும் சுருக்கமாக அறிதல் வேண்டும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே இலங்கையில் தமிழ் மன்னர் ஆட்சி நிலவியதை சிங்கள இதிகாசமான மகாவம்சம் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கை அரசுகளும் தமிழ்நாட்டின் சோழ, பாண்டிய விஜயநகர அரசுகளும் தம்முள் கொண்டிருந்த அரசியல் கலாசார உறவுகள் வரலாற்றில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் தமிழர் ஆட்சி பதினேழாம்

நூற்றாண்டில் மறைவதற்கு முன்பாக ஆட்சி செலுத்திய தமிழ் மன்னர்கள் ஆரிய சக்ரவர்த்திகள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள், "தமிழையும் சைவத்தையும் பேணி வளர்த்த புரவலராகவும், புலவராகவும்" பாராட்டப்பட்டுள்ளனர்.

கி.பி. 1620இல் போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். இவர்கள் காலத்தில் சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன. கிறித்துவ சமய மாற்றத்தில் கொடுமைகள் நிகழ்ந்தன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு இந்துவும் போர்த்துகீசிய தலைவனுக்கு நாள்தோறும் உணவிற்காக ஒரு பசுவை அனுப்பி வைக்க வேண்டும் என விதிக்கப்பட்டது.

போர்த்துகீசிய ஆதிக்கத்துக்குப் பிறகு டச்சு, காலனியாதிக்கம் கி.பி. 1658 முதல் கி.பி. 1790 வரையில் நீடித்தது. புரட்டஸ்தாந்து சமயத்தைச் சார்ந்த டச்சு ஆதிக்கத்தில் சுதேசிய சமயங்கள் இழிந்துரைக்கப்பட்டன. மதமாற்றமும் தீவிரமுற்றது. 1796-ல் ஆங்கிலேயர் கொழும்பு நகரைக் கப்பற்றினர். கி.பி. 1815-ல் கண்டி அரசனை வீழ்த்தி ஈழம் முழுவதையும் ஆங்கிலேயர் தமது காலனியாதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்தினர். இவர்கள் காலத்தில் ஆங்கிலக் கல்வி முறையை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளாமல் கிறிஸ்துவ மிஷனரிகளிடம் விட்டு விட்டதால், ஆங்கிலக் கல்வி முறையை தங்களது மதமாற்ற முயற்சிகளுக்கு பயன்படுத்திக் கொண்டதால், கிறிஸ்துவ மிஷனரிகள், வெஸ்லியன் (1814), அமெரிக்கர் (1816), சேர்ச் மிஷன் (1819) முதலான கிறிஸ்துவ மிஷனரிகள் முன்னிருந்தவர்களைக் காட்டிலும் பன்மடங்கு உத்வேகத்துடன் கல்வி பரப்புதலுடன், கிறிஸ்துவ சமயப் பரப்புதலலயும் மேற்கொண்டனர்.

சைவ சமய ஆர்வலர்கள், சைவ சமய குருமார்கள் கிறிஸ்துவ மிஷனரிகளைப் போல்க் கல்வி பரப்புதலை ஆள்வதில் தகுதியும், திறமையுமற்று பின் தங்கியிருந்தனர். பொதுக் கல்வியில் மட்டுமன்று, சைவ சம்யக் கல்வியும் போதிய தேர்ச்சியில்லாமல் புறச் சமயத்தவரின் எதிர்ப்பு பிரசாரத்திற்கு பயனளிக்க இயலாமல் திணறினர். இந்தச் சூழலில் ஆறுமுக நாவலர் கிழர்ந்தெழுந்தார்.

சமயம் பிரசார நூல்களை போர்க்கலன்களாகப் படைப்பதில் நாவலர் தனி முத்திரை பதித்தார். மெதடிஸ்த ப்?டசாலையில் மாணவராகவும், ஆசிரியராகவும் அவர் பெற்ற அறிவும், அனுபவமும் பைபிளை தமிழாக்கம் செய்ததில் பேர்சிவல் பாதிரியாருடன் கொண்டிருந்த தொடர்பும், சமய பிரசாரத்தில் கிறிஸ்தவர்கள் கையாண்ட வழி முறைகள் நாவலரிடம் பெரும் தாக்கத்தையும், ஊக்கத்தையும், இயக்க ஆற்றலையும் ஏற்படுத்தின.

ஆறுமுக நாவலர் எழுதிய “சைவ தூஷணப் பரிகாரம்”

https://siliconshelf.wordpress.com/2014/05/07/%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%8E%E0%AE%B4%E0%AF%81%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF-%E0%AE%9A%E0%AF%88%E0%AE%B5/

சைவ தூஷணப் பரிகாரம் எல்லாம் இன்று எழுதப்பட்டால் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன். ஆனால் ஒரு நூறு வருஷத்துக்கு முன்னால் எழுதப்பட்ட தமிழ்ப் புத்தகம் என்றால் எனக்கு புரட்டிப் பார்க்க வேண்டும் என்றாவது தோன்றும். அப்படித்தான் இந்தப் புத்தகத்தைப் படித்தேன்.

நாவலர் எல்லாம் எனக்கு வெறும் பேர்தான். தமிழறிஞர், **ராமலிங்க அடிகளோடு** அருட்பா-மருட்பா என்று அடித்துக் கொண்டவர் என்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. அவர் எழுதிய புத்தகங்களில் முதன்முதலாகப் படித்தது இதுதான். pdf கோப்பாகத்தான் படித்தேன். 1956-இல் எட்டாம் பதிப்பாக வந்ததாம்.

அன்றைய பாதிரிகள் சைவத்தை இழிவாகப் பேசுவதால் கோபம் கொண்டு அவர்கள் வாதங்களை பைபிளை வைத்தே மறுத்திருக்கிறார்.

என்னைக் கவர்ந்தவற்றில் முதல் அம்சம் நாவலரின் நடை. நல்ல தமிழ். அதுவும் மேடையில் பேசும் பாணியில் எழுதுவதுதான் இவர் ஸ்டைல் போலிருக்கிறது. **திரு.வி.க. ரா.பி. சேதுப்பிள்ளை,** ஏன் இரண்டு தலைமுறைகளுக்கு முற்பட்ட திராவிடக் கழகப் பேச்சாளர்களுக்குக் கூட இவர்தான் முன்னோடியாக இருந்திருக்க வேண்டும்.

இரண்டாவது அம்சம் லாஜிக். இந்தப் புத்தகத்துக்கு ஒரு முன்னுரை இருக்கிறது. யாரோ **சைவப் பிரகாசசமாசீயர்** என்பவர் எழுதி இருக்கிறார். அவருடைய வாதத்தை "சிவனே சொல்லியாயிற்று சைவம்தான் சிறந்த மதம், பாதிரியே சும்மா கிட" என்று சுருக்கமாக விவரிக்கலாம். நாவலரின் மூளையோ கொஞ்சம் நவீன காலத்தது. நான் விக்ரகத்தை புனிதமானது என்று கருதினால் பைபிள் Ark, ஜெருசலத்தின் கோவில்கள் ஆகியவை புனிதமானவை என்று சொல்கின்றனவே, இது புனிதமான இடம், செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு வா என்று மோசசிடம் இறைவன் ஆணையிடவில்லையா, ஏபல்-கெய்ன் காலத்திலிருந்து கடவுளுக்கு படையல் வைப்பதில்லையா, எனக்கு பிரசாதம் என்றால் உனக்கு ஞானஸ்னான அப்பம் இருக்கிறதே என்றெல்லாம் மாற்றுக் கேள்விகள் எழுப்புகிறார். சைவர்களிடம் பாதிரிகள் கண்டுபிடிக்கும் "அநாகரீக, இன்னும் பக்குவப்படாத காலத்து காட்டுமிராண்டிப் பழக்கவழக்கங்கள்" அத்தனையும் பைபிளில், குறிப்பாக பழைய ஏற்பாட்டில் இருக்கின்றன என்று நிறுவுகிறார்.

என்னைப் பொறுத்த வரையில் நடைக்காகவே புத்தகத்தைப் படிக்கலாம். pdf கோப்பை இணைத்திருக்கிறேன்..

தொகுக்கப்பட்ட பக்கம்: தமிழ் அபுனைவுகள்
தொடர்புடைய பதிவுகள்:
ஆறுமுக நாவலர் நூற்றாண்டு மலர்
நூலகம் தளத்தில் ஆறுமுக நாவலர் பக்கம்

ஆறுமுக நாவலரின் மானநஷ்ட வழக்கு

https://archive.roar.media/tamil/main/history/the-defamation-case-by-arumuga-navalar


சிதம்பரம் நடராஜர் கோவில் ஆயிரம் கால் மண்டபத்தின் முன்பு நின்டிருக்கும் சிவ தீக்ஷிதர்கள்.



19ஆம் நூற்றாண்டில் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் பேசப்பட்ட பெரும் சர்ச்சையாக, 'அருட்பா-மருட்பா' தர்க்கப் பூசல் நிலவியது. அதில் சம்பந்தப்பட்ட சிலர் இறந்த / மறைந்த பின்னரும்கூட அந்த தர்க்கம் நிற்கவில்லை. கிட்டதட்ட நாற்பது ஆண்டுகளுக்கு அந்த 'அருட்பா-மருட்பா' தர்க்கம் தொடர்ந்து நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவரும் அருட்பிரகாச வள்ளலார் என்று சொல்லப்பட்டவருமான இராமலிங்க அடிகளுக்கும், இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் புகழ்பூத்த தமிழறிஞருமான ஆறுமுக நாவலருக்கும் இடையில் தோன்றிய கருத்து முரண்பாடே, இந்த 'அருட்பா-மருட்பா' தர்க்கத்தின் வித்தாக அமைந்தது.

சைவ மரபில் அருட்பாவாக கருதப்படுவது, தேவாரமும் திருவாசகமுமேயாகும். இந்த நிலையில், அருட்பிரகாச வள்ளலாரின் பாடல்கள் அக்காலத்தில் அருட்பா எனப் பெயர்சூட்டப் பெற்றதையடுத்து சைவ மதவாதிகளின் பாரிய எதிர்ப்பைப் பெற்றது. ஆன்ம அனுபூதிநிலையைப் பெற்றவராக கூறப்படும் வள்ளலார் தனது பாடல்களூடாக, சமூகக் கட்டமைப்புகளை விமர்சித்தார். அக்காலத்தில் கடுமையாக பின்பற்றப்பட்டு வந்த சாதிமுறை வள்ளலாரின் பாடலில் கடுமையாக விமர்சிக்கப் பட்டது.

இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் புகழ்பூத்த தமிழறிஞருமான ஆறுமுக நாவலரும், அருட்பிரகாச வள்ளலார் என்று சொல்லப்பட்டவருமான இராமலிங்க அடிகளும்.

ஆறுமுகநாவலர் கட்டுக்கோப்பான சைவசமயி என்ற முறையில், சைவ சமயத்திற்கு எதிரான அம்சங்களை எதிர்த்து அக்காலத்தில் குரல்கொடுத்து வந்தார். சைவத் திருமுறைகளுக்கு நிகராக வள்ளலாரின் பாடல்கள் நிலைபெற்று வந்ததையும் அவற்றுக்கு அருட்பா என்று பெயரிடப்பட்டதையும் கண்டு மனம்பொறுக்காத ஆறுமுகநாவலர், வள்ளலாரின் பாடல்கள் அருட்பா அல்ல எனவும், அவை மருட்பா எனவும் அறிவித்தார். தமிழ்ச்சமூகத்தின் பிரசித்தி பெற்ற அந்த 'அருட்பா-மருட்பா' தர்க்கம் இந்தப்புள்ளியில் தான் ஆரம்பித்தது.

இரு பெரும் அறிஞர்களும் அவர்களின் அடிப்பொடிகளும் இந்தத் தர்க்கத்தில் அதி தீவிரத்துடன் பங்குபற்றினர். ஆறுமுகநாவலர் மற்றும் வள்ளலார் ஆகியோரின் கருத்து வெளிப்பாடுகளை விடவும், அவர்களின் அடிப்பொடிகளின் வாதங்கள் நாகரிக எல்லைகளைக் கடந்து தனிமனிதர் மீதான தாக்குதல்களாக அமைந்தமை அதிர்ச்சிக்குரியது.

தர்க்க ரீதியில் தொடங்கிய இந்தப் பூசலானது, விரைவிலேயே ஏசிப்பேசி வசைமாரி பொழியும் நிலைக்கு ஆளானது. அக்காலத்து முறைமையின்படி கருத்து வெளிப்பாடுகள் பெரும்பாலும் ஆவணங்களாகவும் பிரசுரங்களாகவுமே வெளியாகின.

குதர்க்காரணிய நாச மகா பரசு கண்டனம், இராமலிங்கதப்பிள்ளை அங்கதப்பாட்டு, குதர்க்கிகளின் பொய்க்கோள் விலக்கு, சைவ தூஷணப்

பரிகாரம் என்பது போன்ற தலைப்புகளில் அந்தப் பிரசுரங்கள் அமைந்திருந்தன. இந்தத் தலைப்புகளைப் பார்க்கும்போதே, ‘அருட்பா-மருட்பா’ தர்க்கப் பூசல் எந்தளவு உச்சத்தில் இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இருதரப்பிலும் சண்டையை வளர்ப்பதில் இன்பம் கொண்டவர்கள் இருந்தார்கள். ‘ஆறுமுக நாவலர் இணையற்றவர்’ என்று நாவலரின் அடிப்பொடிகள் சொன்னால், அதற்குப் பதிலடியாக ” ஆறுமுக நாவலர் இணை (வாழ்க்கைத்துணை) அற்றவர் எனவும் அதனால் அவருக்கு ஆண்மையில்லை எனவும், வள்ளலாரின் அடிப்பொடிகள் தூற்றினர்.

இந்தப் பழிச்சொல்லுக்குப் பதிலாக, ஆறுமுகநாவலரின் அடிப்பொடிகள் வள்ளலாரை “பூப்புப் பெண்களைப் புணர்ந்தார்…” என்றும், “பகலிலே துறவி, இரவிலே காமுகர்” எனவும் “புறப்புணர்ச்சி செய்பவர்” என்றும் தூற்றினர்.

இந்தப் பிரச்சினையில் இரு தரப்புத்தான் உள்ளதென இன்றுவரை பலராலும் கருதப்பட்டு வருகின்ற நிலையில், மூன்றாவது தரப்பொன்று சத்தமில்லாது இந்த இரு தரப்புகளையும் முட்டி மோத விட்டுக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அது “தில்லை வாழ் அந்தணர் தம் அடியாருக்கும் அடியேன்” என்று முற்காலத்தில் சுந்தரரைப் பாடவைத்த சிதம்பரம் தீட்சியர்கள் தரப்பு!

சைவக் கோயிலில் பூசை செய்த போதும் தீட்சிதர்கள், சைவர்களின் மூலத்திருநூற்களான தேவாரம், திருவாசகத்திற்கு முதன்மை கொடுக்க மறுக்கும் நிலைப்பாடு உடையவர்கள் என்பதை அண்மைக்கால வரலாறு மூலமே அறியலாம். வடமொழிக்கும் அது சார்ந்த பண்பாட்டுக்குமே அவர்களின் முன்னுரிமை கிடைத்தது. அவர்களுடைய இந்தப்போக்கு, ஆறுமுக நாவலர் மற்றும் வள்ளலார் வாழ்ந்த 19 ஆம் நூற்றாண்டில் இன்னும் தீவிரமாக இருந்தது.

சைவ முறைமைகளை மதித்து சிவபெருமானைப் பூசனை செய்வதற்குரிய சிவ தீக்ஷையினைப் பெறாத, தில்லைத் தீட்சிதர்களின் கையால் திருநீறு வாங்கக் கூடாது என ஆறுமுக நாவலர் முழங்கியதிலிருந்து, தீட்சிதர்களுக்கும் நாவலருக்கும் இடையிலான பகைமை சூல்கொண்டது.

ஆறுமுக நாவலர் மட்டுமல்ல, அருட்பிரகாச வள்ளலாரும் தில்லைத் தீட்சிதர்களுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர் தான்! தில்லையில் ஆனந்தத் தரிசனம் அளிக்கும் நடராஜ மூர்த்தியை கண்குளிரக் கண்டு ஆத்மானுபவம் பெற்ற வள்ளலாருக்கு அந்தக் கோயிலை தீட்சிதர்கள் ஜாதி முறைமை உள்ளிட்ட கொடிய சட்டதிட்டங்களுடன் நடத்தியமை பிடிக்காமல் போயிருந்தது. இறை எனும் அருட்பெரும் சோதிக்கு முன்னால் அனைத்து உயிர்களும் சமம் என்ற கொள்கையுடைய வள்ளலார், சிதம்பரம் நடராஜப்பெருமான் ஆலயத்தை தீட்சிதர்கள் கொண்டு நடத்திய நிலையைப் பார்க்கப் பொறாது, போட்டிக் கோயிலாகவே வடலூர் சத்திய ஞானத் திருச்சபையை நிறுவினார் என்றும் கூறப்படுகின்றது.

தில்லைச் சிதம்பரத்தில் இருப்பது சிற்றம்பலம் தான் எனவும், வடலூரிலேயே பேரம்பலம் உள்ளது எனவும் கூறி பக்தர்களை ஜாதி, மதம், இனம் பார்க்காது இறைவனைத் தொழ அழைத்தார் வள்ளலார். அவரது இந்தச் செயல் தீட்சிதர்களுக்கு அறவே பிடிக்காமற் போனது.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரையும், அருட்பிரகாச வள்ளலாரையும் மோதவைக்கும் நிலைக்கு ஆளாக்கியவர்கள் தீட்சிதர் தரப்பே என்று கூறப்படுகின்றது. அவர்கள் ஒரு கட்டத்தில் ஆறுமுகநாவலர் பக்கம் நின்றும் இன்னொரு கட்டத்தில் வள்ளலார் பக்கம் நின்றும் இந்தப் பூசல் தணிந்து விடாது பாதுகாத்தனர்.

வள்ளலாரை ஆதரித்து தீட்சிதர் தரப்பு நடத்திய ஒரு கூட்டமே, ஆறுமுகநாவலர் வழக்குத் தொடர்வதற்கு முழுமூல காரணமாகியது. அந்தக் கூட்டத்தில், நாவலர் என்ற சொல்லுக்கு பொய்யன், வித்தையில்லாதவன், நாவில் பழிச்சொல்லுடையோன் போன்ற அர்த்தம் தோன்றுமாறு வள்ளலார் பேசியிருந்தார். வள்ளலார் தனது எதிர்ப்பு வெளிப்பாட்டினை அந்த அளவோடு நிறுத்திக் கொண்ட போதும், தில்லைத் தீட்சிதர்கள் தரப்பு ஆறுமுக நாவலரை வசைபாடியது. அதன் உச்சக்கட்டமாக, அந்தக் காலத்து தில்லைத் தீட்சிதர்களுக்கு தலைமை தாங்கிய சபா நடேச தீட்சிதர் அந்தக் கூட்டத்தில் வைத்து, "நாவலரை அடித்து நொருக்கவேண்டும்" என்று வெளிப்படையாகவே அச்சுறுத்தல் விடுத்தார். இந்த அச்சுறுத்தலை அடிப்படையாக வைத்தே, மான நஷ்டம் அல்லது அவதூறு தொடர்பான வழக்கினை நாவலர் தரப்பு 1869 ஆம் ஆண்டு தாக்கல் செய்தது.


தமிழ்நாட்டின் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற இந்த வழக்கு தொடர்பாக பல்வேறு கட்டுக் கதைகள் அருள் உணர்வு பொங்க, இன்றும் பரவிக்கிடக்கின்றன.

இன்றும் கூட பலராலும் நினைக்கப்படுவது போல, இந்த வழக்கு, 'வள்ளலார் எதிர் ஆறுமுக நாவலர் வழக்கு' அல்ல. அது உண்மையில், 'சபா நடேச தீட்சிதர் எதிர் ஆறுமுக நாவலர்' வழக்கு ஆகும். ஆம்! இந்த வழக்கின் முதலாம் எதிரியாக சபா நடேச தீட்சிதரே முன்னிறுத்தப்பட்டார். அவரையடுத்து மேலும் நான்கு தீட்சிதர்களையே தனது அடுத்தடுத்த எதிரிகளாகக் குறிப்பிட்டு ஆறுமுக நாவலர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வள்ளலார் பெயர் ஆறாவது எதிரியாக குறிப்பிடப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு வந்த போது அந்த வழக்கினை ரொபேர்ட் என்ற ஆங்கிலேய நீதிபதியே விசாரித்தார். நாவலர் மீது சுமத்தப்பட்ட அவதூறு குறித்து விளக்கம் கேட்ட நீதிபதியிடம், தாம் "நாவலர்" என்ற தமிழ்ச்சொல்லுக்கான விளக்கத்தையே சிதம்பரம் கூட்டத்தில் கூறியதாகவும், அது ஆறுமுக நாவலர் என்ற மனிதரைக் குறிக்கவில்லையென்றும் வள்ளலார் சாட்சியமளித்ததாக கூறப்படுகின்றது. இதனடிப்படையில் வள்ளலாரை விடுதலை செய்த நீதிமன்றம், முதலாம் எதிரியான சபா நடேச தீட்சிதருக்கு தண்டனை விதித்தது.

நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட சபா நடேச தீட்சிதருக்கு 50 ரூபா (19ஆம் நூற்றாண்டு கால இந்தியப் பணம்) தண்டப்பணம் விதிக்கப்பட்டு தீர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்த வழக்கு நடைபெற்று, தீர்ப்பு வெளியான பின்னரும் கூட, 'அருட்பா-மருட்பா' தர்க்கப் பூசல் நிறுத்தப்படவில்லை. தமிழ்ச்சூழலின் நாற்பது ஆண்டுகளைத் தின்று முடித்த பின்னரே, அந்தப் பூசல் அடங்கி மறைந்தமை சுட்டிக்காட்டத் தக்கது.



இச்சரித்திர பூர்வ நிகழவை அடிப்படையாகக் கொண்டு ப.சரவணன் எழுதிய "அருட்பா மருட்பா கண்டனத் திரட்டு" நூலின் முகப்பு அட்டை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

https://saivaneethi.org/srila-shree-arumuga-navalar/

வாழ்க்கைக் குறிப்பு

ஆறுமுக நாவலர் பெருமான் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் சைவ நெறியையும் தமிழ் மொழியையும் வளர்ப்பதற்குப் பெரும் பணிபுரிந்தவர். அவரின் கல்விப் புலமை நாவன்மை சைவத் தமிழ்ப் பணி என்பவற்றிற்காகத் திருவாவடுதுறை ஆதினத்தால் நாவலர் என்ற பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். அவ்வாறே சைவம் காத்த அவர் சைவ மக்களால் ஐந்தாம் குரவர் எனவும் போற்றப்படுகின்றார்.

தோற்றம்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை – சிவகாமி

அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும்.

கல்வி

சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் மூதுரை முதலிய நீதிநூல்களையும், நிகண்டு முதலிய நூல்களையும் பயின்றார். சரவணமுத்து புலவர் மற்றும் சேனாதிராச முதலியாரிடம் உயர்கல்வி பயின்றார். தமிழ் மற்றும் சமஸ்கிருதத்தில் புலமை பெற்றார். வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷன் கல்லூரியில் ஆங்கில மொழியைக் கற்றார்.

நாவலர் பெருமான் சைவம், தமிழ் ஆகிய இரண்டின் வளர்ச்சிக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணம் செய்தவர். அவர் சிவபக்தி உடையவர்; சிவனடியார் மீது பக்தி கொண்டவர்; தமிழ்ப் புலமை மிக்கவர்; சிறந்த கல்விமான்; பிரசங்கத்தில் வல்லவர்; வாக்குச் சாமர்த்தியம் உள்ளவர்; நல்லொழுக்கம் உடையவர். அப்பண்புகள் அவரிடம் இளமைக்காலந் தொட்டுக் காணப்பட்டன. அவை, அவர் சமயப் பணியைத் திறம்படச் செய்ய உதவியாக அமைந்தன.

நாவலர் சைவ சமயத்தை வளர்க்க, பல வழிமுறைகளைக் கையாண்டார். அவற்றில் முதல்வழி சைவப் பிரசங்கமாகும். அவரது பிரசங்கத்தின் பொருளாக சிவசின்னங்கள், திருமுறைகள் முதலானவை அமைந்திருந்தன. அதன் மூலம் மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியை ஊட்டினார்; புறச்சமயம் போகாமல் மக்களைச் சைவத்தில் நிலைத்திருக்கச் செய்தார். சைவ மக்கள் திருநீறு முதலிய சிவசின்னங்களை அணியவும் சைவத் திருமுறைகளைப் பாடவும் விரதங்களை அனுட்டிக்கவும் ஆலய தரிசனம் செய்யவும் சமய மரபுகளைப் பேணவும் அவர் தூண்டுகோலாக விளங்கினார்.

தமிழகத்திலும் இலங்கையிலும் சைவசமயத்தையும் தமிழையும் வளர்த்த ஆறுமுக நாவலர் எல்லோராலும் நன்கு போற்றப்பட்டார். அவர், சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். அச்சு இயந்திரசாலைகள் அமைத்து, பல

நூல்களைத் தமிழில் வெளியிட்டார். பழைய நூல்களைப் புதுப்பித்தும், புதிய நூல்களை எழுதியும் சைவத்திற்கும் தமிழுக்கும் பல தொண்டுகள் செய்தார். அவர் கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலான வசன நூல்களை எழுதினார். அவை எளிமை மிக்கவை. அதனால், வசனநடைக்கு ஆறுமுகநாவலரே தந்தை என்பர்.







நாவலர் சைவத்தின் உயர்வுக்காக ஆற்றிய பணிகளை வரிசைப்படுத்தின் அவை கீழ்க்கண்டவாறு அமைவனவாகும்

- ஐரோப்பியர் வருகையால் நிலை குன்றியிருந்த சைவசமயத்தை மீண்டும் அதன் நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம் நாவலருக்கு இளமை முதல் இருந்து வந்தது. பதின்மூன்றாவது வயதிலே இதனை நினைத்து மனம் வருந்தி, சிவபெருமானை வேண்டி வெண்பா பாடினார்.
- சைவத்தை வாழவைக்கவேண்டும் என்ற பேராசையினாலே. தனது சுகபோகங்களை எல்லாம் துறந்து வாழ்நாள் முழுவதும் பிரமசாரியாகவே வாழ்ந்தார். இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் "சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்க்கவேண்டும் என்னும் பேராசையேயாம்" என 1868இல் "சைவசமயிகளுக்கு விக்கியாபனம்" என்னும் இவரது வெளியீட்டில் கூறியிருப்பதன் மூலந் தெரிந்து கொள்ளலாம்.
- சைவமுறையிற் கல்வியூட்டவேண்டுமென்று நினைத்துப் பால பாடங்களை எழுதினார். பாதிரிமார் முதலாம் வேதவினாவிடை இரண்டாம் வேதவினாவிடை என்னும் புத்தகங்களை எழுதி அச்சிட்டுப் பரப்பியதுபோல் முதலாம் இரண்டாம் சைவ வினா விடைகளை எழுதப் பரப்பி சைவ சமய அறிவையூட்டினார்.
- பாதிரிமார்கள் அச்சியந்திரசாலையைத் தாபித்துத் துண்டுப் பிரசுரங்களையுஞ் சைவ கண்டனமான பிரதிகளையும் அச்சிட்டு வெளிப்படுத்தித் தம் சமயத்திற்கு மக்களை இழுப்பதைக் கண்டு தானும் சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடங்களை நிறுவிப் பழைய சமய நூல்களை ஆதாரமாகக் கொண்டு தாம் எழுதிய வசன நூல்களையும் கிறித்துமத கண்டனப் புத்தகங்களையும் அச்சிட்டுப் பரப்பினார். மேலும். இதில் பல பழந்தமிழ்ப் பெரு நூல்களையும் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பித்தும் எழுதியும் வெளியிட்டார்.

நாவலர் கல்விப் பணிகள்

- நாவலர் மெதடிஸ்த்த பாடசாலையில் (இன்றைய யாழ். மத்திய கல்லூரியில்) பயின்ற காலத்தில் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலமும் மேல்வகுப்பு மாணவர்களுக்குத் தமிழும் கற்பித்து

வந்தார். பாடசாலை ஆசிரியர் வேதனச் செலவுகளைச் சுருக்குவதற்கு இம்முறை பெரிதும் பயன்பட்டமையால் பின்னாளில் பல பாடசாலை அதிபர்கள் இம்முறையினைப் பின்பற்றுவாராயினர்.

- காலையிலும் மாலையிலும் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதுடன் முதியோர் கல்வியிலும் கவனம் செலுத்தியுள்ளார். 31-12-1847 தொடக்கம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும். வண்ணார் பண்ணை சிவன்கோயிலிலும், ஏனைய இடங்களிலும் செய்துவந்த பிரசங்கம், சமய அறிவை ஊட்டிவந்ததுடன் முதியோர் அறிவையும் பெருக்கியுள்ளதென்றே கூறலாம்.
- தமிழில் பட்டத்தேர்வுகள் வைத்துப் பட்டங்கள் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வைத்தார். யாழ்ப்பாணத்தில் பின்னாளில் உருவாகிய தமிழ்ச்சங்கத்திற்கு மூலமாக விருந்தவை நாவலர் அவர்களால் செய்து வைக்கப்பட்ட இவ்வேற்பாடுகளேயாம்.
- பெண்கள் கற்றலின் அவசியம்பற்றி 8ஆம் பாலபாடத்தில் விளக்கமாகவும் விரிவாகவும் கூறியுள்ளார்.
- மக்களால் தேடப்படும் கல்விப்பொருள். செல்வப்பொருள் என்னும் இரண்டினுள். செல்வப்பொருளைச் சம்பாதித்தற்கும், காப்பாற்றுதற்கும். அதனாலடைய வேண்டிய சுகங்களை உள்ளபடி அறிந்து அனுபவிப்பதற்கும். கடவுளையும் அவரை வழிபடும் நெறியையும் அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெறுவதற்கும் காரணமாய்ச் சிறந்து முன்னிற்பது கல்வியே. ஆதலால், அதனைப் பயிலுதற்குத்தானமாகய (இடமாகிய) வித்தியாசாலைகளைத் தாபிக்க வேண்டும். அவைகளுக்கு உதவிசெய்ய வேண்டும். முதற் பொருள் வைத்து அவைகளை ஒழுங்குபெற நடத்த வேண்டும். இப்படியாகக் கட்டப்படும் கல்விக்கூடங்களில் கருவிநூல். சமயநூல்களேயன்றிக் கைத்தொழில்களையும் கற்பிப்பது விசேடம் எனக் கூறியிருக்கின்றார்.

சைவத்தையும் தமிழையும் நன்கு பாதுகாத்த நாவலர், 1879 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆந் திகதி இறையடி சேர்ந்தார். அவரது குருபூசைத்

தினம் கார்த்திகை மாதம் மக நட்சத்திரமாகும். நாவலரது பணிகளைப் பணிகளைப் பெரியோர் பின்வருமாறு போற்றுவர்.

நல்லைநக ராறுமுக நாவலர்பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே – எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

- சி. வை. தாமோதரம்பிள்ளை



ஆறுமுக நாவலர்

https://www.uyirpu.com/?p=18657

ஆறுமுக நாவலர் பற்றிய கட்டுரை தமிழில் குறிப்பு சட்டகம்

1. முன்னுரை
2. வாழ்க்கை
3. கல்வி
4. பணிகள்
5. நூல்கள்
6. முடிவுரை

முன்னுரை

தமிழ் மற்றும் சைவம் என்பன வளர தமது வாழ்நாளை அர்ப்பணித்த ஈழத்துப் பெரியார்களில் மிகவும் முக்கியமானவர் ஆறுமுக நாவலர் ஆவார்.

ஈழத்தில் பிறந்து வளர்ந்தவராக இருந்தாலும் கூட இவரது தமிழ் மற்றும் சைவப் பற்றானது இவரை தமிழ்நாடு வரை சென்று பணியாற்ற வைத்தது.

இவரது வாழ்க்கை, கல்வி, பணிகள், இவர் எழுதிய நூல்கள் தொடர்பாக விளக்குவதாக இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

வாழ்க்கை

ஆறுமுக நாவலர் இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நல்லூர் எனும் ஊரில் 1882 டிசம்பர் 18 ஆம் திகதி கந்தப்பிள்ளை மற்றும் சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார்.

இவரது இயற்பெயர் ஆறுமுகன் என்பதாகும். இவரது தந்தை, தாத்தா, பூட்டன் ஆகியோர் தமிழறிஞர்களாக இருந்ததுடன் அரச ஊழியர்களாகவும் இருந்துள்ளனர்.

இவ்வாறான பெருமைமிக்க குடும்பப் பின்னணியில் இருந்து வந்த இவர் பிற்காலத்தில் சைவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் ஆனார்.

கல்வி

ஐந்தாவது வயதில் கல்வி கற்க ஆரம்பித்த இவர் சுப்பிரமணிய உபாத்தியரிடம் நீதி நூல்களையும் தமிழையும் கற்றார். பின்னர் சரவணமுத்து புலவரிடமும் சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வியை கற்றுக் கொண்டார்.

12 வது வயதில் தமிழ், சமஸ்கிருதம் மொழிகளில் புலமை பெற்றார். பின்னர் முன்னணி ஆங்கில பாடசாலையான வெஸ்லியன் பள்ளியில் ஆங்கிலம் கற்று திறமை பெற்றதோடு அதே பள்ளியில் தனது 19 வது வயதில் ஆசிரியராக பணியமர்த்தப்பட்டார்.

பணிகள்

இவரது பணிகள் சைவ சமயத்திற்கும் தமிழிற்கும் அளப்பரியவையாகும். அந்த வகையில் சைவ சமயத்தை வளர்க்கும் பொருட்டு பிரசங்கம் செய்வதை வழக்கமாக்கி கொண்டார்.

இவரது பிரசங்கங்களின் விளைவாக சமய விழிப்புணர்வு ஏற்பட்டது. சைவப் பிள்ளைகளுக்கு நூல்களை அச்சிடுவதற்காக தனது இல்லத்திலேயே அச்சுக் கூடம் ஒன்றினை நிறுவி பல நூல்களை அச்சு வடிவில் உருவாக்கி மாணவர் கைகளில் கிடைக்கச் செய்தார்.

இவரது பணி தமிழகத்திலும் கூட பரவியிருந்தது. அங்கு திருவாடுதுறை, இராமநாதபுர சமஸ்தானம், மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதானம், குன்றக்குடி என பல இடங்களில் பிரசங்கங்கள் செய்து புகழ் பெற்றார்.

அத்துடன் தமிழகத்தில் பல சைவ பாடசாலைகளை நிறுவியதுடன் பல நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார்.

நூல்கள்

இவரால் எழுதப்பட்ட அல்லது பதிப்பு செய்யப்பட்ட நூல்களாக இன்று வரை நூற்றுக்கும் அதிகமான நூல்கள் அறியப்பட்டுள்ளன. அவற்றுள் சில நூல்கள் பின்வருமாறு.

- திருக்குறள் பரிமேலழகர் உரை
- திருவிளையாடல் புராணம்
- அகத்தியர் அருளிய தேவத்திரட்டு
- இலங்கை பூமி சாஸ்திரம்
- ஏரெழுபது
- கந்தபுராண வசனம்
- சிவராத்திரி புராணம்
- சேது புராணம்
- திருக்கை வழக்கம்
- திருத்தொண்டர் புராணம்
- திருமுருகாற்றுப்படை
- நன்னூல் விருத்தியுரை
- போலியருட்பா மறுப்பு
- வக்கிரதண்டம்
- வாக்குண்டாம்
- விநாயக கவசம்

போன்றவற்றை குறிப்பிடலாம்.

முடிவுரை

இவ்வாறான சைவப்பெருஞ் சேவைகளையும், தமிழ் வளர்ப்பினையும் செய்த ஆறுமுக நாவலர் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி 1879 ஆம் ஆண்டு தனது 56 வது வயதில் இயற்கை எய்தினார்.

இவர் இறந்தாலும் பதிப்பாளராகவும் வைச பிரசங்கராகவும், கல்விசாலை நிறுவனராகவும், எழுத்தாளராகவும் இவர் ஆற்றிய அரும் பெருஞ்செயல்கள் இவரது புகழை பறை சாற்றுபவையாக இருக்கின்றன.

ஆறுமுக நாவலரின் வாழ்வும் பணிகளும்

By வளவ துரையன்

https://puthu.thinnai.com/2015/08/24/%E0%AE%86%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AE%E0%AF%81%E0%AE%95-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%B5%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D/

தமிழ் மொழியில் பண்டைக் காலம் தொட்டே உரைநடை என்னும் வகைமை இருந்து வந்துள்ளது. தொல்காப்பியர்,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று
உரைநடை வகையே நான்கென மொழிப"

என்று குறிப்பிடுவதிலிருந்து உரைநடையின் இருப்பை நாம் உறுதியாக உணர முடிகிறது. ஆனால் உரைநடை நூல்கள் தொடக்கத்தில் இல்லை. அக்காலத்திய நூல்கள் எல்லாம் பெரும்பாலும் செய்யுள் வடிவில்தான் இருந்தன. சில காலம் கழித்து செய்யுளும் உரை நடையும் கலந்த நூல்கள் வெளி வரத் தொடங்கின. பிற்காலத்தில் ஐரோப்பியர் வருகையின் காரணமாகத்தான் தமிழ் உரைநடை புத்தொளி பெற்றது எனலாம். காலப்போக்கில் வளர்ந்து வந்த உரைநடை பத்தொன்பதாம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்றது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில்தான் அது செழுமை பெறத்தொடங்கியது எனலாம். தமிழ் உரை நடை வளர்ச்சியில் ஆறுமுக நாவலரின் தொண்டு அளப்பிடற்கரியதாகும். ஆறுமுக நாவலரின் உரைநடை ஆற்றலைக் கண்டு வியந்த பரிதிமாற் கலைஞர் "ஆங்கில உரைநடைக்கு டிரைடன் [Dryden] போன்று

தமிழ் உரைநடைக்கு ஆறுமுக நாவலர் சிறந்து விளங்கினார்" என்று போற்றுகிறார். மேலும் அவர் நாவலரை "வசன நடை கை வந்த வள்ளலார்" என்றும் கூறிப் புகழ்கிறார்.

ஆறுமுக நாவலர் இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் என்ற ஊரில் தோன்றினார். அவர் 1822- ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 18- ஆம் நாள் அதாவது தமிழ் ஆண்டாம் சித்திர பானு மார்கழி மாதம் 5- ஆம் நாள் அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை மற்றும் சிவகாமி அம்மையார் என்பாருக்கு கடைசி மகனாகப் பிறந்தார். அவருக்கு நான்கு சகோதார்களும் மூன்று சகோதரிகளும் உடன் பிறந்தாராக இருந்தனர். நாவலரின் தந்தையார் கந்தப்பிள்ளை அரசுப்பணியில் இருந்ததோடு தமிழ் அறிஞராகவும் திகழ்ந்தார். நாவலருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் பிள்ளை என்பதாகும்.

ஆறுமுக நாவலரை அவர்தம் ஐந்தாம் அகவையில் கல்வி கற்கப் பணித்தனர். அவர் அப்போது நல்லூரில் சிறந்த ஆசிரியராக இருந்த சுப்பிரமணியம் என்பாரிடம் தமிழ் மொழி பயின்றதோடு, நீதிநூல்களையும் கற்றார். நாவலரின் ஒன்பதாம் வயதில் அவர் தந்தையர் கந்தப்பிள்ளை காலமானார். பிறகு நாவலரின் மூத்த அண்ணன் அவரை சரவணமுத்துப் புலவரிடம் கல்வி கற்க அனுப்பினார். சில காலம் கழித்து சரவணமுத்துப் புலவரின் ஆசிரியராகிய சேனாதிராச முதலியாரிடம் நாவலர் உயர் கல்விக்காகச் சேர்ப்பிக்கப்பட்டார். ஆறுமுக நாவலர் தம் பன்னிரண்டாம் வயதிலேயே தமிழ் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ந்து புலமை பெற்றார்.யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் மெதடிஸ்த ஆங்கிலப் பள்ளி என்பது முன்னணியில் சிறந்து விளங்கிய பாடசாலையாகும். அதுவே பிற்காலத்தில் யாழ்ப்பாணம் மத்தியக் கல்லூரி என்றாகிற்று. அங்கு பயின்ற நாவலர் ஆங்கில மொழியிலும் வல்லுனரானார். மேலும் அவர் தம் இருபதாவது வயதில் அப்பள்ளியிலேயே ஆசிரியரானார். அப்போது அப்பள்ளியை பேர்சிவல் பாதிரியார் என்பவர் நிறுவி நடத்தி வந்தார். அந்தப்

பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்க முனைந்தபோது அப்பணிக்கு நாவலர் பெரும் உதவி புரிந்தார். பாதிரியாருடன் சென்னை சென்று அம்மொழிபெயர்ப்பை அச்சிடவும் அவர் துணை நின்றார்.

ஆறுமுக நாவலர் தமிழில் ஆழ்ந்த பற்று கொண்டிருந்ததோடு, சைவ சமயத்திலும் தீவிர கவனம் கொண்டிருந்தார். தமிழையும் சைவத்தையும் தம் இரு கண்களாகக் கருதினார். சைவ சமய வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டினார். சைவ சமயத்தின் மேன்மையை அனைவரும் உணரும் வண்ணம் சொற்பொழிவுகள் ஆற்றத் தொடங்கினார். அவரது முதல் சொற்பொழிவு வண்ணார் பண்ணை என்னும் ஊரிலிருந்த வைத்தீஸ்வரன் கோவிலில் 1847- ஆம் ஆண்டு டிசம்பர் 31- ஆம் நாள் நடைபெற்றது. அதற்குப் பிறகு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் அவர் தொடர்ந்து சொற்பொழிவாற்ற மக்களுக்கு சைவத்தின் பெருமை தெரிய ஆரம்பித்தது.

மேலும் சைவ சமயத்திற்குத் தொண்டாற்று முகத்தான் அவர் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் ஒரு சைவப்பாடசாலை தொடங்கினார். அதன் பின்னர் அவர் தம் முழு நேரத்தையும் சைவ வளர்ச்சிக்காகவே செலவிடத் தீர்மானித்தார். அதன் பொருட்டு 1848- ஆம் ஆண்டு செப்டம்பரில் தம் ஆசிரியப் பணியைத் துறந்தார். சைவ சமயம் தொடர்பான பாட நூல்கள் அப்போது பிள்ளகளுக்குத் தேவையாயிருந்தன. நாவலர் அப்புத்தகங்களைத் தாமே அச்சிட எண்ணம் கொண்டார். எனவே அச்சு இயந்திரம் ஒன்று வாங்கக் கருதினார். அதற்காக நல்லூர் சதாசிவம் பிள்ளை என்பாருடன் 1849 –ஆம் ஆண்டு ஆடி மாதம் சென்னை சென்றார். அப்போது திருவாடுதுறை ஆதீனத்தில் அவர் சைவச் சொற்பொழிவாற்றினார். அதைப் பாராட்டிய திருவாடுதுறை ஆதீனகர்த்தர் நாவலர் எனும் பட்டத்தை அவருக்கு வழங்கினார். அப்போது நாவலருக்கு அகவை 27 ஆகும். சென்னையில் அவர் சில

காலம் தங்கி இருந்தார். அப்போது சூடாமணி மற்றும் நிகண்டுரையும் பதிப்பித்ததோடு சௌந்தர்யலகரி உரையையும் அச்சிட்டார். பிறகு ஓர் அச்சியந்திரம் வாங்கிக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார். தம் இல்லத்திலேயே 'வித்தியானுபாலனயந்திரசாலை' எனும் பெயரில் அச்சுக்கூடம் ஒன்று நிறுவினார். அந்த அச்சுக் கூடத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலைமறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதி உரை, திருமுருகற்றுப்படை உரை, போன்ற நூல்களை அச்சிட்டார். மேலும் திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, ஏசுமத பரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களையும் வெளியிட்டார். சென்னையிலும் அவர் தங்கசாலைத்தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை எனும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் தொடங்கினார். அதன்மூலம் திருவாசகம், திருக்கோவையார் போன்ற நூல்களை 1859- ஆம் ஆண்டு வைகாசி மாதம் வெளியிட்டார். மேலும் மூன்றாண்டுகள் தமிழ் நாட்டில் தங்கியிருந்த நாவலர் சென்னை, திருவாவடுதுறை, திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் சைவச் சொற்பொழிவுகள் ஆற்றினார். 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் சென்றார்.

பின்னர் 1863 –இல் மீண்டும் தமிழகம் வந்த நாவலர் இராமநாதபுரம் சமஸ்தானம் சென்று அங்கு சொற்பொழிவுகள் ஆற்றினார். பிறகு மதுரை சென்ற அவர் மீனாட்சியம்மன் கோயிலில் சொற்பொழிவு ஆற்றினார். அங்கே அவர் மீனாட்சி அம்மனுக்கு அணிவிக்கப் பெற்ற பரிவட்டமும், பூமாலையும் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சென்று அவர் சொற்பொழிவு ஆற்றிய போது அவரைச் சிறப்பிக்க எண்ணியவர்கள் அவரைப் பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள் ஓதுவார்கள் சூழ்ந்து வர சகல வாத்தியங்கள் முழங்க பட்டணப்பிரவேசம் செய்வித்தார்கள். பிறகு

திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்கு வேளூர் சீர்காழி ஆகிய ஊர்களுக்குச் சென்று வணங்கிய பின்னர் சிதம்பரம் சென்றார். அங்கு 1864 ஐப்பசியில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். அதுவே ஆல்போலப் பெருகி இன்றும் 150 ஆண்டுகள் கடந்து ஆறுமுக நாவலர் புகழைப்பேசி வருகிறது. 1864 மார்கழியில் மீண்டும் சென்னை வந்த நாவலர் நூல்கள் அச்சிட்டும் சைவச் சொற்பொழிவுகள் ஆற்றியும் தமிழ்த்தொண்டு புரிந்தார். இக்காலக்கட்ட்த்தில்தான் அவர் வள்ளலார் எனப்படும் இராமலிங்கம் பிள்ளையின் திருவருட்பாவை ஒரு சில ஆலய உற்சவங்களில் திருமுறைகள்ளுக்குப் பதிலாகப் பாடுவதைக் கண்டித்து போலியருட்பா மறுப்பு எனும் நூலை வெளியிட்டார். 1869 ஆனியில் சிதம்பரம் சென்ற போது சிலர் தம்மைத் தாக்கியதாக நாவலர் மீது மஞ்சகுப்பம் நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க அந்த வழக்கில் தொடுத்தவர்களுக்கே அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. நாவலர் பிறகு தருமபுரி, திருவிடைமருதூர், திருவேட்டக்குடி, காரைக்கால் கோடிக்கரை ஆகிய தலங்களுக்குச் சென்ற பிறகு 1870 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார். அதே ஆண்டில் கோப்பாயில் ஒரு பாடசாலையைத் தொடங்கித் தம் சொந்த செலவில் அவர் நடத்தினார். 1872 இல் வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றைத் தொடங்கினாலும் போதிய நிதி வசதி இல்லாததால் அதை நான்கு ஆண்டுகள்தாம் நடத்த முடிந்தது. இத்தனை ஆண்டுகளாய்த் தாம் பெற்ற அனுபவங்களை எல்லாம் தொகுத்து நாவலர் யாழ்ப்பாணச் சமயநிலை எனும் நூலை 1872 ஐப்பசியில் வெளியிட்டார். 1875க்கும் 1878க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் நிறைய நூல்கள் எழுதினார் எனலாம். அவையாவன : நன்னூல் விருத்தியுரை, நைடத உரை, திருவிளையாடற் புராணம், நன்னூல் காண்டிகை உரை, சிவ பூசாவிதி, மூன்றாம் அனுட்டான விதி, குரு சிஷ்யக் கிரமம், பூசைக்கு இடம்

பண்ணும் விதி, சிரார்த்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ்-சம்ஸ்கிருத அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி, ஆறுமுக நாவலரின் உரை மிகத்தெளிவாகவும், அதே நேரம் மனத்தில் இடம் பெறக்கூடிய வகையில் எளிதாகவும் இருக்கும். சான்றாக ஒன்றைப் பார்க்கலாம். இது நீதி வெண்பாவின் பாடல் :

"நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குத்
துன்று கிளைக்கும் துயர்சேரும்—குன்றிடத்தில்
பின்னிரவில் வந்தமரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்"

இதற்கு நாவலரி உரை இது:

"எவராலும் ஏற முடியாத ஒரு பெரிய மலைக்குகையில் ஓர் அரச அன்னம் அன்னப்பட்சிகளோடு வாசம் செய்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் இரவு பெருமழையினால் வருந்திய ஒரு காக்கை, தான் இருக்க இடம் கேட்டது. மந்திரியாகிய அன்னம் காக்கைக்கு இடம் கொடுக்கலாகாது என்று சொல்லவும், அரச அன்னம் அதன் சொல்லைக் கேளாமல் காக்கைக்கு இடம் கொடுத்தது. காக்கை அன்று இரவில் அங்கே தங்கி எச்சமிட அவ் எச்சத்தில் இருந்து ஆலம் வித்து முளைத்து எழுந்து பெரிய விருக்ஷமாகி, விழுதுகளை விட்டது. ஒரு வேடன் விழுதுகளைப் பற்றிக்கொண்டு அம்மலையிலேறிக் கண்ணி வைத்து அன்னங்களைப் பிடித்தான்."

ஒருமுறை ஆறுமுக நாவலர் வழக்கு ஒன்றில் நீதி மன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டியிருந்தது. நாவலர் தம் சாட்சியத்தை ஆங்கிலமொழியில் பதிவுசெய்ய ஆரம்பித்தார். ஆனால் குறுகிய எண்ணம் கொண்ட நீதிபதியோ தமிழில் சொல்ல உத்தரவிட்டார். உடனே நாவலர், "எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்று காலோட்டப்புக்குழி" என்று தொடங்கினார்.

அதை ஆங்கில் நீதிபதிக்கு மொழிபெயர்க்க இருந்த மொழிபெயர்ப்பாளர் திணறினார். சினம் கொண்ட நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறினார். மறுத்த நாவலர் மீண்டும் தமிழிலேயே பேச நாவலரின் மாணவர் ஒருவர் அதை மொழிபெயர்த்தார். "சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது" என்பது அவர் கூறியதன் பொருளாகும். எல்லி, ஆழிவரம்பு, கால் ஏற்று, காலோட்டம், புக்குழி எனும் சொற்களுக்கு முறையே சூரியன், கடற்கரை ஓரம், காற்று வாங்க, சிறுநடை, புறப்பட்டபோது என்பவை பொருள்களாகும்.

போர்த்துகீசியரால் அழிக்கப்பட்ட நகுலேஸ்வரம் என்னும் ஒரு தொன்மையான சிவன் கோயிலை அவர் யாழ்ப்பாணத்தில் மீண்டும் உருவாக்க பெருமுற்சி செய்தார்.

ஆறுமுக நாவலர் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1879- ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை நடந்த ஆடிச்சுவாதியன்று நிகழ்த்திய உரையே அவரின் இறுதிச் சொற்பொழிவாகும்.

1879 –ஆம் ஆண்டு அதாவது பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 18 –ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அவரது உடல்நலம் குன்றத்தொடங்கியது. தொடர்ந்து அவரால் குளிக்க முடியவில்லை. எனவே அவர்தம் நித்திய பூசை முதலானவை வேதாரண்யத்தைச் சார்ந்த ஒரு சிவாச்சாரியாரால் நடத்தப்பட்டது.

1879-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை நாவலர் தேவாரம் ஓதச்செய்தார். அதைச்ச் செவிமடுத்துக்கொண்டே சிதம்பரம், காசி, மதுரை. திருச்செந்தூர், முதலான தலங்களின் விபூதி தரித்துக்கொண்டார்.

உருத்திராட்சம் பூண்டார். தம் கைகளைச் சிரசின் மேல் வைத்து அன்று இரவு ஒன்பது மணியளவில் ஆறுமுக நாவலர் இவ்வுலக வாழ்வை நீத்து சிவபெருமானின் திருவடி சேர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் அவதரித்துச் சைவம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டையும் தம் கண்களாகப் போற்றிய ஆறுமுக நாவலர் ஆற்றிய சொற்பொழிவுகளும், எழுதிய நூல்களும், பதிப்பித்த நூல்களும் அவரால் தொடங்கப்பட்டு இன்றுவரை நடந்து வரும் பள்ளிகளும் அவரை என்றும் நம் மனத்தில் இருத்திக்கொண்டே இருப்பதால் அவர் என்றும் நம்மிடையே வாழ்கிறார் என்று உறுதியாகக் கூறலாம்.

பாச்சுடர் வளவ. துரையன்
தலைவர், இலக்கியச்சோலை,
20, இராசராசேசுவரி நகர்,
கூத்தப்பாக்கம் கடலூர், 607 002.
பேசி : 9367631228



அகற்றப்பட்ட ஆறுமுக நாவலரின் புகைப்படம்! வடமாகாண ஆளுநருக்கு நாவலர் பெருமானின் கொள்ளுப் பேரன் முறைப்பாடு

https://tamilwin.com/article/sri-la-sri-arumuga-navalar-jaffna-1679776870

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் ஜெயசீலன் நல்லூரில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலரை அவமதித்துள்ளதாக வடமாகாண ஆளுநருக்கு நாவலர் பெருமானின் கொள்ளுப் பேரன் முறைப்பாடு வழங்கியுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

குறித்த முறைப்பாட்டில் யாழ். நாவலர் மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் புகைப்படம் மண்டபத்தில் நிறுவப்பட்டு வணங்கப்பட்டது.

ஆனால் தற்போது அங்கிருந்து படம் அகற்றப்பட்டுள்ளது. ஆணையாளர் ஜெயசீலனின் அறிவுறுத்தலின்படி, இந்து சமயப் பண்பாட்டுத் திணைக்களத்திற்குச் சொந்தமான இந்தக் கட்டிடத்தைக் கைப்பற்றி புதுப்பிப்பதை எதிர்த்த ஜெயசீலன் , நூல் வெளியீட்டு விழாவிற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் புகைப்படத்தை அவமதித்து அகற்றிவிட்டு, அதை கீழே வைத்துள்ளமை ஆதாரத்துடன் தகவல் கிடைத்துள்ளது.

நாவலரின் படத்தை உரிய இடத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அது வரை எவ்வித நிகழ்வுகளுக்கும் அனுமதி வழங்கக் கூடாது. மேலும் நாவலர் பெருமானை அவமதித்த மாநகர ஆணையாளர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கடிதம் நாவலரின் கொள்ளுப் பேரனால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது .






ஆறுமுக நாவலர்

(டிசம்பர் 18, 1822 – டிசம்பர் 5, 1879)

http://worldtamilan.com/?page_id=162



தமிழ் உரைநடை

செவ்விய முறையில் வளர்வதற்கு உறுதுணையாய் நின்றவர். தமிழ், சைவம் இரண்டும் வாழப் பணிபுரிந்தவர்.

யாழ்ப்பாணம், அத்தியடியில் தோன்றியவர். தமிழ் நூல்களை முதன் முறையாகச் செவ்வையான வகையில் பதிப்பித்தவர். திருக்குறள்

பரிமேலழகருரை, நன்னூற் காண்டிகை போன்ற இலக்கிய, இலக்கண நூல்களையும் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதித்தவர்.

வாழ்க்கைக் குறிப்பு

தோற்றம்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில்அத்தியடியில் 1822 டிசம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை – சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகவாகப் பிறந்தார்.[1] நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப. கந்தப்பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக்காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள். அரசாங்கத்தில் வேலை பார்த்தவர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள். சகோதரிகளுள் ஒருவர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களின் தாயார்.

கல்வி

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது 19வது வயதில்(1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல்

பாதிரியார் கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியருடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

பணிகள்

சமயப் பணி

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார் நாவலர். சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசம்பர் 31, 1847 ஆம் நாள் நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்டம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரி 3 பவுண் மாதச் சம்பள ஆசிரியப் பணியைத் துறந்தார்.

அச்சுப் பணி சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டுரையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார்.

திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

தமிழகப் பணி

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது. சென்னையில் திருவாசகம், திருக்கோவையார் நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார். பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கி, சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலை என்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறை மற்றும் திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கி சைவப்பிரசங்கங்கள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுர சமஸ்தானத்தில் பிரசங்கம் செய்தார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்திலே பிரசங்கித்து மீனாட்சிக்கு அணிவிக்கப்பெற்ற பரிவட்டமும் பூமாலையும் அணிவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.

குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமை ஆதீனத்தில் அவர் செய்த பிரசங்கத்தை மெச்சி நாவலரை பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள், ஓதுவார்கள் சூழ்ந்து வர சகல விருதுகள், மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள். அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர், சீர்காழி ஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார். அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.[2]

1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார்.

போலியருட்பா மறுப்பு

இராமலிங்கம்பிள்ளை (வள்ளலார்) தாம் பாடிய பாடல்களைத் திருமுறைகளுடன் ஒப்பிட்டு, சில ஆலய உற்சவங்களிலே திருமுறைகளுக்குப் பதிலாகத் தமது பாடல்களைப் பாடுவதைக் கண்ட நாவலர், போலியருட்பா மறுப்பு எனும் நூலை எழுதி வெளியிட்டார். 1869 ஆனியில் சிதம்பரம் சென்றார். அப்போது சைவாகம விடயமாகவும் சிவதீட்சை விடயமாகவும் நாவலர் தெரிவித்த சில கருத்துக்களால் மனம் பேதித்திருந்த சில தீட்சிதர்கள், வள்ளலாரைக் கொண்டு சிதம்பராலயத்தில் 1869 ஆனி உத்தரத்தன்று ஒரு கூட்டம் கூட்டினார்கள். அங்கு நாவலரைப் பலவாறாகத் நிந்தித்து விட்டு, நாவலர் தம்மை அடித்ததாக மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். இவ்வழக்கில் வழக்காளிகளுக்கே அபராதம் விதிக்கப்பட்டது.[சான்று தேவை]

சிதம்பர வழக்கின் பின் நாவலர் தருமபுரி, திருவிடைமருதூர், திருவேட்டக்குடி, காரைக்கால், கோடிக்கரை ஆகிய தலங்களைத் தரிசித்த பின்னர் 1870 பங்குனியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

சைவப் பாடசாலை நிறுவல்

1870இல் நாவலர் கோப்பாயில் ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்து தமது செலவில் நடத்தினார். 1871 இல் வண்ணார்பண்ணையில் ஜோன் கில்னர் என்பவர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணாக்கர் விபூதி அணிந்து சென்றமைக்காகப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.[சான்று தேவை] அப்பிள்ளைகளின் நன்மை கருதிய நாவலர், சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை வண்ணர்பண்ணையில் 1872 தை மாதத்தில் நிறுவி நடத்தினார். நிதி வசதி இன்மையால் இப்பாடசாலை நான்கு ஆண்டுகளே நடைபெற்றது.

1872 ஐப்பசி மாதத்தில் தாம் அதுவரை பெற்ற அனுபவத்தால் அறிந்த உண்மைகளைத் திரட்டி எழுதி அதற்கு யாழ்ப்பாணச் சமய நிலை எனப் பெயர் தந்து வெளிப்படுத்தினார். 1875க்கும் 1878க்கும் இடைப்பட்ட காலத்தில் நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடல் புராணம், நன்னூற் காண்டிகையுரை, சிவபூசா விதி, மூன்றாம் அனுட்டான விதி, குரு

சிஷ்யக் கிரமம், பூசைக்கு இடம்பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழ் அகராதி, தமிழ்-சமக்கிருத அகராதி, தமிழ்-ஆங்கில அகராதி முதலிய நூல்களை எழுதுவதிலும் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும் நாவலர் ஈடுபட்டார்.

ஆறுமுக நாவலரின் உரைத்திறன்

நீதி வெண்பா உரையில்,

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்கும்
துன்று கிளைக்கும் துயர்சேரும்-குன்றிடத்தில்
பின்இரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம் (-74)

என்ற பாடற்கதையை நாவலர் பின்வருமாறு விளக்குகின்றார்;-

"எவராலும் ஏற முடியாத ஒரு பெரிய மலைக்குகையில் ஓர் அரச அன்னம் அன்னப் பட்சிகளோடு வாசம் செய்து கொண்டிருக்கும் போது, ஒருநாள் இரவு பெருமழையினால் வருந்திய ஒரு காக்கை, தான்இருக்க இடம்கேட்டது. மந்திரியாகிய அன்னம் காக்கைக்கு இடம் கொடுக்கலாகாது என்று சொல்லவும், அரச அன்னம் அதன் சொல்லைக் கேளாமல் காக்கைக்கு இடம் கொடுத்தது. காக்கை அன்று இரவில் அங்கே தங்கி எச்சமிட அவ் எச்சத்தில் இருந்து ஆலம் வித்து முளைத்து எழுந்து பெரிய விருக்ஷமாகி, விழுதுகளை விட்டது. ஒரு வேடன் விழுதுகளைப் பற்றிக் கொண்டு அம்மலையில் ஏறிக் கண்ணிவைத்து அன்னங்களைப் பிடித்தான்".

மொழித்திறன் குறித்த நிகழ்ச்சி

ஆறுமுக நாவலர் ஆங்கிலப் புலமையும் வாய்ந்தவர்.வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க வேண்டியிருந்த போது நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் ஆறுமுக நாவலர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். ஆறுமுக நாவலர் ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் முணுமுணுத்தபடி தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட, ஆறுமுக நாவலர் உடனே, 'எல்லி எழ நானாழிப்

போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்று காலோட்டப்புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப்போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட நாவலர் மறுத்து தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மொழிபெயர்த்தார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்டபோது' என்பது அவர் கூறியதற்கு அர்த்தம். (எல்லி,ஆழிவரம்பு,கால் ஏற்று,காலோட்டம்,புக்குழி எனும் வார்த்தைகளுக்கு முறையே சூரியன்,கடற்கரை ஓரம்,காற்று வாங்க,சிறுநடை,புறப்பட்டபோது என்று பொருள்) [3]

சாதிப்பிரசாரம்

சைவ சமயப் பிரசாரத்தில் தீவிரமாக இருந்த நாவலர் சமூக சீர்திருத்தத்தில் இக்கால நோக்கின்படி பிற்போக்குவாதியாக இருந்தார். சாதிப்பிரசாரங்களை, வர்ணாசிரமத்தை வலியுறுத்தினார். „தாழ்ந்த சாதியார் இடத்தில் போசனம் பண்ணல் ஆகாது" போன்ற தீண்டாமைக் கருத்துக்களைத் தனது ,முதலாம் சைவ_வினாவிடை' எனும் நூலில் வலியுறுத்தியுள்ளார்[4].

எனினும், மூடத்தனமான சாதிக் கட்டுப்பாடுகள் இருந்த அந்தக் காலத்தில், சாதியிலும் சமயமே அதிகம். சமயத்திலும் சாதியதிகமென்று கொள்வது சுருதி, யுத்தி அனுபவம் மூன்றிற்கும் முழுமையும் விரோதம் என்ற கருத்தையும் கூறியிருக்கிறார் நாவலர்.

நகுலேஸ்வரம்

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் எனும் பழைமையான சிவபெருமான் திருக்கோயிலை மீண்டும் உருவாக்க முயற்சி செய்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில் உள்ள நாவலர் மணிமண்டபம்

இலங்கை அரசு வெளியிட்ட அஞ்சல்தலை இறுதி நாட்கள் [தொகு] நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளது குருபூசை நாளான ஆடிச்சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச

வித்தியாசாலையில் இடம்பெற்றது. 1879ஆம் ஆண்டு (பிரமாதி வருடம்) கார்த்திகை மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நாவலரது உடல் நலம் குன்றியது. அடுத்த மூன்று தினங்களும் குளிக்க முடியாதிருந்ததால் நாவலரது நித்திய சிவபூசை வேதாரணியத்துச் சைவாசாரியர் ஒருவரால் செய்யப்பட்டது. 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை (05-12-1879) இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படிக் கட்டளையிட்டு அவைகள் ஓதப்படும்போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர், முதலிய புண்ணியத்தலங்களின் விபூதி அணிந்து, உருத்திராட்சம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.[சான்று தேவை]

குருபூசை நாள் : கார்த்திகை – மகம்
நினைவு நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகில் நாவலர் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
ஆறுமுக நாவலரின் நினைவாக இலங்கை அரசு 1971 அக்டோபர் 29 இல் நினைவு அஞ்சல்தலை ஒன்றை வெளியிட்டது.

காணொளிகள்

01] **சைவ நெறி | ஆறுமுகநாவலர் - காலப்பின்னணி பணிகள்**
https://www.youtube.com/watch?v=IkWfJ-FphTA [38:44]
02] **வள்ளலார் - ஆறுமுக நாவலர் இடையே மோதல் ஏற்பட்டது ஏன்..?**
https://www.youtube.com/watch?v=nnIYc6KpHNc [24:19]
03] ஆறுமுக நாவலரின் தமிழ்ப் பணிகள் - முனைவர் சு.காந்திதுரை
https://www.youtube.com/watch?v=KzZe7VN2SJQ [1:03:11]
04] **தமிழ் | Tamil | தரம் - 10 | Grade-10 | 10.06.2021 | ஆறுமுக நாவலர்**
https://www.youtube.com/watch?v=e9deUziqjhg [48:10]
05] **ஆறுமுகநாவலர் | சைவநெறி |**
https://www.youtube.com/watch?v=KZTcUpuzfS4 [59:20]

(😊)(😊) ஆறுமுக நாவலர் (😊)(😊)